കേരള ദീപം

v. 2 No. 46 24 Nov 1929



3L

m211, N28KH

N29.2.46.

189081

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஞு நவம்பர் மீ 21உ [No. 46.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 901
2. அப்பர். (நாடக வியல்)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 903
3. வில்விபாரத விளக்கம் (சூதுபோர்ச் சருக்கம்)
T. S. நடராஜபிள்ளை. B.A., B. L. 905
4. தமிழ்ப் பாடம் (திருவரங்கக்கலம்பகம்) 907
5. நம்மாழ்வார் வைபவம் (பெரியதிருவந்தாதி)
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 910
6. கம்பராமாயணம் (உலாவியற் படலம்)
T. N. சேஷாசலம் B. A , B. L. 912
7. மானத சாத்திரம் (நரம்புகள்)
T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A. B. L. 914
8. சாஹ்றியின் கருத்துக்கள் சில. 916
9. வர்த்தமானம் 919

## கலா நிலயம்

### கல்சரை அடையும் வகை

V

தினசரி வர்த்தமானப் பத்திரிகைகள் என்றிருப்பவை, கொலை களவு குதிரைப்பந்தயங்களோடு நில்லாமல், பெரும்பாலும் அரசியல் ஜாதி மதம் முதலியவைகளோடு தொடர்புடைய கட்சிவாதங்களையும் மேற்கொள்வதால், கல்சருக்கு ஆதாரமான தரும சிந்தனையையும் பகுத்தறிவையும் பற்றிச்சிதைத்து அவை வளரவொட்டாமல் பற்பல விதங்களில் தடுக்கின்றன. இவ்வர்த்தமானப் பத்திரிகைகளில் வரும் உரைகளைப் பருகிப்பருகிச் சுழல்கின்ற சுழற்சியில் தாம் செய்வன தருமமோவெனக் கருதும் வழக்கத்தைப் பொதுசனங்கள் துறக்கின்றனர். கட்சி வாதங்கள் அடிக்கின்ற உடுக்கையால் பெரும்பாலோர் தம் பகுத்தறிவை உகுத்துவிட்டுப் பிறர்புகுத்து மறிவே தலைக்கேறினராய்த் தாமும்பெரிதாடி மற்றவரையும் ஆட்டங்காணல் ஓரிடத்தும் புதுமையன்று. கட்சி எதுவேயாயினும் ஆக; அதன் கொள்கைகள் நல்லனவாயினும் ஆக, தீயனவாயினும் ஆக; அக்கட்சியை நடத்துவோர் உயர்ந்தபதவியில் இருப்பினும் இருக்க; அன்னவரல்லராயினும் ஆக; யாதும்பேதமில்லை. பொதுஜனங்களிடத்தில் இயற்கையாயமைந்துள கல்சரம்சங்கள் கைகூடாதவாறு புரிகின்ற தன்மை கட்சியென்ற பேரால் நிகழ்கின்ற தொழில்களுக்கெல்லாம் பொதுவா யமைந்திருக்கின்றது. கட்சியின் நோக்கம் உயர்ந்ததாயிருக்கலாம்; அதனைச் சேர்பவர்களிற் சிலரேனும் உத்தமர்களாயிருக்கலாம்; நினைத்தபடி நோக்கம் நிறைவேறி வருவதுபோலவும், சிற்சிலர் அதனால் சில நன்மைகளைப் பெற்றுவருவது போலவும் தோன்றினும் தோன்றலாம். மற்று, இக்கட்சிப்போர்க் குழப்பங்களினிடையே எத்தனைத்தனைபேர் தம் தரும நினைவையும், பகுத்தறிவையும்—தெய்வபக்தியையுங்கூட – இழக்கவேண்டி வருகின்றது. மாநுட இயற்கை இருக்குமாறும், உலகசரித்திரம் நடக்குமாறும் நுனித்துணர்ந்தவர், கட்சிவாதத்தால் வாழ்க்கையின் தூய்மை தொலைந்தொழியு மென்பதை மறக்கமாட்டார். வாழ்க்கைத் தூய்மை தொலைந்தபின் எது பெற்றாலென், [illegible] ஒழிந்தாலென்! 'பெற்றாலென்' என்றோமெனினும் பெறுவதற்கொன்றுளதென்று நாம் கனவிலும் நினைக்கவில்லை. "பெறுவதற்கில்லையோ! இங்கிலாந்தைப் பார்" என்பார், கார்லைல், ரஸ்கின் ஆர்னல்ட்முதலான மெய்யறிவாளர்களைப்போய்க் கேட்கட்டும். அவர்களது உரைகளின் அருமையைத்தெரிந்து கொள்ளத்தக்கதேர்ச்சி உளராயின் பிறகு அந்நல்லோர்சொன்ன பொருள் இவர் உள்ளத்தைவிட்டு ஒருபோதும் நீங்காது.

கட்சிப்போராட்டங்களால் மாந்தர்களது இயற்கையாய நற்குணங்கள் மெலிவடையுமென்னும் வாய்மையை, ஆசையு மச்சமுமின்றி நின்றுரைத்த வீரர்களுள்,இற்றைக்கு நூறாண்டுகளுக்குமுன் அமெரிக்காவிலிருந்த பெரியார் 'வில்லியம் எல்லெரி சானிங் என்பவரும் ஒருவர். அவரையே இங்கிவ் வுண்மையைச் சொல்லவைப்போம்:—

" நமது கட்சியமைப்புக்கள் நம்மை உயர்த்துவதில்லை ; அன்னதன் காரணமும் வெளிப்

படை, கட்சியின்பாலுள்ள ஊக்கத்தின் வன்மையே அக்காரணம். இவ்வூக்கம் யாவற்றையும் பொசுக்கிவிடுகின்றது; கல்சருக்குக் கூற்றுயிருப்பதும் இதுவே. ஆதலின் நற்கதியடைய வேண்டுமென்ற விருப்பமுடையோர் யாவரும் இக்கட்சியென்னுந் தீயில் கைவைக்க லாகாதென்று அறிவுறுத்தவேண்டியது என் கடமை ஆகின்றது. இது உங்கள் தேசத்தை நாசம் செய்துவிடும் என்பது மாத்திரமன்று—அதனினும் கொடியதோர் போர்க்கோலம் பூண்டது இக்கட்சி—உங்களையே நாசஞ்செய்துவிடும். வாய்மை, நியாயம், கரவிலா நெஞ்சம், தரும ஒழுக்கம், பகுத்தறிவு, அடக்கம், அன்பு என்னுமிவைகளை ஒருங்கே வாயிலே போட்டுக்கொள்ளும் யமன் இதன்றி வேறில்லை.

"உங்களைச் சுற்றி விவகரிக்கின்ற கட்சிகள், கொள்கைகளாலும் கையாளும்முறைகளாலும் வேறுவேறாகத் தோன்றினாலும், ஒருவிதத்தில் அவைகளெல்லாம் ஒற்றுமையாகவே இருக்கின்றன. கட்சியின் போரால் போரிடும் ஊக்கம் கொள்ளைநோய்போல் அவைகள் யாவற்றையும் பற்றித் தலைவிரித்து ஆடச்செய்கின்றது. நல்லதோ கெட்டதோ, ஒருகருமத்தை முன்னிட்டுச் சிலர் கட்சிகூடியதும், இதற்கு எதிர் வேறு சிலர் மற்றொருகட்சி சேரவேண்டியது இன்றியமையாததாகின்றது. இவ்வாறு இரண்டு கட்சிகள் எதிரெதிர் பாய்ந்து மோதிக்கொள்ளும் போது, ஆதியில் எந்நோக்கங்கொண்டு கட்சி சேர்ந்தனரோ அந்நோக்கம் அடியுடன் மறைந்தகல, இருதிறக் கட்சியினோர் மனத்திலும் புதியதோர் விகாரம் புகுந்தியக்கத் தலைப்படுகின்றது. தம்மிலிருந்து மாறுபடுவோர்மாட்டுத் தாங்கமாட்டா வெறுப்பொன்று தோன்றி மிகவும் மூர்க்கமான ஊக்கத்தோடு யாவருங்கண் டஞ்சும்படி விவகரிக்கக் காண்கின்றோம். இதனைவிட இரக்கமற்றதும் வன்புடையதுமான மனோவிகாரம் மானுட இயற்கையிலிருக்க இயலாது. தன்னுடைய தனிலாபத்தைத் தேடியும் தன்னுடைய தனிக் கொள்கையை நாட்டவும் தன்னந்தனியாக முயல்கின்றவனுக்கே தன், கர்வம் பிடிவாதம், எப்ப[illegible]வது வெற்றிபெறவேண்டுமென்ற ஆசை, கோபம், முதலிய உணர்ச்சிகளை எல்லைக்குள் அடக்கிவைத்துக்கொள்வது எளிதன்று. எனின், இன்னவர் பலர் ஒரு கும்பல் கூடிப் போராடப்புகுந்தால் என்னாம்! அக்கும்பலிற் சேர்ந்த ஒவ்வொருவனும் மற்றெல்லாருடைய மூர்க்கத்தையும், பிடிவாதத்தையும், பழிவாங்கவேண்டுமென்ற நினைவையும் ஒருங்கே தனக்குள் பெற்றுக்கொண்டவனாகின்றான். முதலில் மாறுபடுவதற்குக் காரணமா யிருந்த கொள்கை பொய்யேனும் மெய்யேனும், இப்பொழுது அக்கொள்கையெல்லாம் போய்விடத் தன் கட்சி சயிக்கவேண்டுமென்ற ஆர்வமே பன்னூறு மடங்கு இவனுக்கு அருமையாய் முன்வந்து நிற்கின்றது. எதிரெதிர் கொள்கைகளால் மாறுபட்டுநின்றவர் இப்பொழுது கைகலந்து போராடத் தலைப்படுகின்றனர். இப்போரும், கொள்கையைநிலைநிறுத்துவதற்கன்று, இனி முறையை நடத்தி வைப்பதற்குமன்று—அதிகாரமும் சயமும் அடையவேண்டு மென்பதே கருத்துமுற்றக் குடிகொள்ளலாகின்றது. ஆகவே, எவ்விதத் தீத்தொழிற்கு மஞ்சாது செய்கின்ற இத்தகைய போராட்டத்தின் துன்மார்க்கமே எத்தேய எக்கால சரித்திரத்திலும் பாடப்பெற்றுள பெரும் 'பல்லவி' யாயிற்று.................................

"தருமத்தைச் சார்ந்து தன்னிலைநிற்கவொட்டாப் பெரும்பகை இக் கட்சியுணர்ச்சி. இவ்வுணர்ச்சியை உட்கொண் டிருப்பதற்கேற்ற அளவு ஒவ்வொருவனும், தன்கட்சி காண்பதையும் கேட்பதையும் மதிப்பதையும், கண்டுகேட்டு மதிக்கின்றானே யொழிய, அவனுடைய சுயஅறிவும் பொறியும் இயற்கைத் தொழிலும் ஒளியும் மழுங்கினவனாகின்றான். தன் மதிக்குத் தக்கதென்று தோன்றுவதைத் தெரிவிக்கும் உரிமையைக் கட்சிக்குப் பலியாக்கிவிட நேர்கின்றது. தலைவர்களும் கட்சியூக்கம் மிகுந்த மற்றவர்களும் எந்தவிதக் கூக்குரல் நாட்டில் முழங்க வேண்டியது தம் கருத்திற்கு உதவியாயிருக்குமென்று கிளப்பிவிட்டுவிடுகின்றனரோ, அதனையே அக்கட்சிக் கும்பலிலுள்ள எல்லோரும் கூவித்திரியக் கற்பதல்லாமல் வேறில்லை. எந்த விதத்திற் பார்த்தாலும் கட்சியை நம்பலாகாது; அதுவும், எதிர்க்கட்சியினர்களது குணம் ஒழுக்கம் முதலியவைகளைப்பற்றிச் சொல்வதை ஒருபோதும் நம்பலாகாது."

சானிங் இங்குச் சுருங்கச் சொல்லியுள்ள ஒவ்வொன்றிற்கும் விரிவுரை உதாரணம் முதலியன இந்நாள் பொதுஜன வாழ்க்கையைப் பற்றியுழக்கும் கட்சிவாதங்களில் யாவரும் கண்டுவருகின்றாராதலின் நாம் மேலுஞ் சில சொல்லல் மிகை. மற்றபடி யோக்கியர்களாயும், கற்றவர் என்று கருதப்படும் இனத்தைச் சேர்ந்தவர்களாயும் இருப்பவர்கள் பலர் தேர்தல் காலங்களில் தகவிலாச் செயல்களும் மொழிகளும் சூழ்வதன் காரணம் இதுவாயின், பேதைக் கல்சர், பாவம்! இக்கட்சிக்குமுன் நிற்பதெங்ஙனம்.

இத்தகைய கட்சிப்போரில் கொண்டுபோய் ஆழ்த்துவதற்குரிய சாதனங்களுள் முக்கியமானதாய் வர்த்தமானப் பத்திரிகைகள் பெரும்பாலும் நடமாடுவதால் கல்சரை அடையும்வகை நாடுவோர் அவைகளை அஞ்ச வேண்டுவது அவசியமாகின்றது. சானிங், அரசியல் கட்சிகளைக் குறித்து பேசினானாலும், அது ஜாதி மதம் சீர்திருத்தம் முதலிய எல்லாக் கட்சிகளுக்கும் பொருந்தும். ஆதலின், தம்முடைய கல்சரை நாடுவோரெலாம் தெய்வசிந்தனை தருமசிந்தனை பகுத்தறிவு ஆகிய இயற்கையிலமைந்துள அம்சங்கள் அழியாது காத்துக்கொள்ளுங் கடமை யுடையவராயிருக்கின்றனர். தம்முடைய கல்சரை நாடுவாரன்றிப் பொதுஜன நன்மையை எய்துவிப்பார் பிறரிலர்.



OFFICE OF THE REGIS... 1929 MADRAS

# அப்பர்

## 7. அப்பரும் நாடக வியலும்

[ 885 வது பக்கத் தொடர்ச்சி ]

V. கூத்தின் சில பாத்திரங்கள்: அவற்றின் தொழில்கள்.

" வேத்தியல் பொதுவியல் எனவிரு திறத்து
மாத்திரை யறிந்து மயங்கா மரபின்
ஆடலும் வரியும் பாணியும் தூக்கும்
கூடிய குயிலுவக் கருவியு முணர்ந்து
நால்வகை மரபி னவிநயக் களத்தினும்
எழுவகை நிலத்தினு மெய்திய விரிக்கு
மலைப்பெருஞ் சிறப்பிற் றலைக்கோ லரிவையும்,
வாரம் பாடும் தோரிய மடந்தையும்
தலைப்பாட்டுக் கூத்தியு மிடைப்பாட்டுக் கூத்தியு
நால்வேறு வகையி னயத்தகு மரபின்
எட்டுக் கடைநிறுத்த வாயிரத்தெண் கழஞ்சு
முட்டா வைகன் முறைமையின் வழாஅத்
தாக்கணங் கனையார்"

ஊர்காண் காதை - சிலப்பதிகாரம்

இவ்வாறு இளங்கோவடிகள் கூத்தின் சில பாத்திரங்களைத் தொகுத்துச் சுட்டுவதைச்சற்று வகுத்துக் காட்டுவோம் – "மாத்திரை யறிந்து மயங்கா மரபி னாடல்'' யாவை? நாடகவியலில் மாத்திரை யாதென விரிப்பதன் முன்னர், ஆடற் பகுதிகளைக் காண்போம்:—

### (i) பதினொரு கூத்து.

கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடை துடிமா லல்லியமல் * கும்பஞ்—சுடர்விழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பண்டரங்கங்
கொட்டியிவை காண்பதினோர் கூத்து.

இவை தெய்வ விருத்தியான பதினொரு கூத்தாம். இப்பதினொரு கூத்தையும் இரு கூறாக்கி, அவற்றுள் அல்லியம், கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல்லாடல் என்னும் நின்றாடும் ஆறினை ஒருவகுப்பாயும், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை என்பன வீழ்ந்தாடும் ஐந்தை மற்றொருவகுப்பாயும், கொள்வர். இவை அசுரரைக் கொல்ல அமர ராடின. அவற்றின் இலக்கணம்—

$ "அல்லிய மாயவ னாடிற் றதற்குறுப்பு
சொல்லுப வாறு மெனல்'' (1)

"கொட்டிகொடு விடையோ னாடிற் றதற்குறுப்
பொட்டிய நான்கா மெனல்'' (2)

"அறுமுகத்தோ னாடல் குடைமற் றதற்குப்
பெறுமுறுப்பு நான்கா மெனல்'' (3)

"குடத்தாடல் † குன்றெடுத்தோ னாட லதனுக்
கடைக்குப வைந்துறுப் பாய்ந்து'' (4)

"பாண்டரங்க முக்கண னாடிற் றதற்குறுப்
பாய்ந்தன வாறு மெனல்'' (5)

"நெடியவ னாடிற்று மல்லாடன் மல்லிற்
கொடியா வுறுப்போ ரைந்தாம்'' (6)

"துடியாடல் வேன்முருக னாட லதனுக்
கொடியா வுறுப்போ ரைந்தாம்'' (7)

"கடையம யிராணி யாடிற் றதனுக்
கடைய வுறுப்புக்க ளாறு'' (8)

"காமன தாடல்பே டாட லதற்குறுப்பு
வாய்மை யினாரா யினர்கு'' (9)

"மாயவ ளாடன் மரக்கா லதற்குறுப்பு
நாமவகையிற் சொலுங்கால் நான்கு'' (10)

"பாவை திருமக ளாடிற் றதற்குறுப்
போவாமா லொன்றுடனே யொன்று'' (11)

இவ்வாடல்கள் முதல்முதலில் ஆடிய காரணம்:—
புரமெரித்தல் சூர்மாத் தளைப்படுத்தல் கஞ்ச
னுரனெரித்தல் வாணனைவா னுய்த்தல்-பெரிய
வான்முத லாகவே லன்முதன் மாயோன்
அமர்முத லாடிய வாறு.

இவற்றுள் சிவபெருமான் ஆடியன விரண்டு. அவை யாவன, கோடுகோட்டிபாடலும், பாண்டரங்கமுமாம். இவற்றை இளங்கோவடிகள் கடலாடு காதையிற் குறிப்பிடுவதைக் காண்க:—

" சீரியல் பொலிய நீரல நீங்கப்
பாரதி * யாடிய பாரதி யரங்கத்துத்
திரிபுர மெரியத் தேவர் வேண்ட
வெரிமுகம் பேரம் பேவல் கேட்ப
வுமையவ ளொருதிற னாக வோங்கிய
விமையவ னாடிய கோடுகோட்டி யாடலும்,
தேர்மு னின்ற திசைமுகன் காணப்
பாரதி $ யாடிய வியன்பாண் டரங்கமும்'' என்றார்.

இவற்றுள் ‡ கோடுகோட்டிக் கருவி தேவாரத்தில் வருவதைக் காண்க.

* கும்பம் - குடக்கூத்து.

நடமாடித் தோகைவிரிக் கின்றமா மயில்கா ளும்மை
நடமாட்டம் காணப்பாவியே னன்னோர் முதலிலேன்
குடமாடு கூத்தன் கோவிந்தன் கோமிறை செய்தெம்மை
உடைமாடு கொண்டானுங்களுக் கினியொன்று போதுமே
நாய்ச்சியார் - 10-ம் - திருமொழி - 7.

$ யானையை மருப்பொசித்தாடல். அஞ்சன வண்ணன் ஆடிய ஆடல் பத்துள், கஞ்சன் வஞ்சத்தின் வந்த யானையின் கோட்டை ஒசித்தற்கு நின்றாடிய அல்லியத் தொகுதியென்னும் கூத்து ஒன்று. தொகுதியென்றது முகம், மார்பு கை கால்களின் வட்டணை அவிநய முதலியன இருக்கும் தொழில் செய்யாது நிற்றலின் காரணமாக, "ஆடலின்றி நிற்பவை யெல்லாம் மாயோனுடைய வைணவ நிலையே"- அல்லியம் தேவாரத்தில்வர யாதொரு சந்தர்ப்பமு மில்லை.

† " கடகரி யுரியர் போலுங் கனமழு லாளர் போலும்
படவர வரையர் போலும் பாரிடம் பலவுங் கூடிக்
குடமுடை முழவ மார்க்கக் கூளிகள் பாட நாளு
நடகவி லடிகள் போலு நாகவீச் சரவ னாரே.
திருநாகேச்சுரம்-திருநேரிசை 5

* பாரதி - பைரவி. பாரதியரங்கு - சுடுகாடு.

$ சிவபெருமான் பாரதி வடிவாய் வானோராகிய தேரில் நான்மறைக் கடும்பரிபூட்டி நெடும்[illegible]றைத்து வார்துகின் முடித்துக் கூர்முட்பிடித்துத் தேர்முன் னின்ற திசைமுகன் காணும்படி வெண்ணீற்றை அணிந்து ஆடிய கூத்து பாண்டரங்கக் கூத்தாம்.

‡ இது கொடுங்கொட்டி, கொடுகொட்டியென விகாரமாயிற்றென்பர் நச்சினார்க்கினியர்.

கொக்க ரைகுழல் வீணை கொடுகொட்டி
பக்க மேபகு வாயன பூதங்க
ளொக்க வாட லுகந்துடன் கூத்தராய்
அக்கி னோடர வார்ப்பரா ரூரரே.

திருவாரூர் - திருக்குறுந்தொகை 1.

குரவ னார்கொடு கொட்டியுங் கொக்கரை
விரவி னார்பண் கெழுமிய வீணையும்
மருவு நாண்மலர் மல்லிகை செண்பகம்
பரவு நீர்ப்பொன்னிப் பாலைத் துறைபரே.

திருப்பாலைத்துறை - திருக்குறுந்தொகை 7.

பழகியவல் வினைகள் பாற்று வானைப்
பசுபதியைப் பாவகனை பாவந் தீர்க்குங்
குழகனைக் கோளரவொன் றாட்டு வானைக்
கொடுகொட்டி * கொண்டதோர் கையான் [றன்னை
விழவனை வீரட்ட மேவி னானை
விண்ணவர்க ளேத்தி விரும்பு வானை
யழகனை யாரூரி லம்மான் றன்னை
யறியா தடிநாயே னயர்த்த வாறே.

திருஆரூர் - திருத்தாண்டகம் -6.

[குறிப்பு:— கொடுகொட்டி யாடலுக்கு இன்றி யமையாக் கருவி கொடுகொட்டியாம்]

பாண்டரங்கம்:— இப்பாண்டரங்க வேடத்தை அப்பர் வர்ணிப்பதைக் காண்க:—

விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை
தரித்ததோர் கோல கால பயிரவ னாகி வேழ
முரித்துமை யஞ்சக் கண்டும் ஒண்டிரு மணிவாய் [விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ [னாரே

திருச்சேறை - திருநேரிசை-6.

[தமருகம் - ஒருவகைத் தோற்கருவி]

பயிரவக் கோலங்கொண்ட பெருமான் பாண்டரங்கக் கூத்தின் முடிவில் சிரித்த (கோப)நகையாலே திரிபு ரமெரிந்ததை அப்பர் குறிப்பிடுகின்றாராகி "உமை யஞ்சக் கண்டும்...சிரித்தார்" என்றார். இதனையே

கொட்டு முழவா வத்தொடு கோலம் பலவணிந்து
நட்டம் பலபயின் றாடுவர் நாகமரைக் கசைத்துச்
சிட்டர் திரிபுரந் தீயெழச் செற்ற சிலையுடையா
னிட்டமுமையொடு நின்ற நெய்த்தானத்திருந்தவனே

திருநெய்த்தானம் - திருவிருத்தம் 4.

என்று கூறினர் போலும்.

துடி யாடுவது முருகவேள் ஆயினும், சிவபெருமானே முருகன் எனத் திருப்பேரெயில் திருக்குறுந்தொகை 6-ம் பாசுரத்தில்

"முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனிற் றானோர் தலைமக
னென்னை யாளு மிறையவ னெம்பிரான்
பின்னை யாரவர்? பேரெயி லாளரே" என்றதால்

கனவிற் சிவபெருமான் வந்து துடிகொட்டல் பொருத்தமே:—

நஞ்சடைந்த கண்டத்தர் வெண்ணீ றாடி
நல்லபுலி யதண்மே னாகங் கட்டிப்
பஞ்சடைந்த மெல்விரலாள் பாக மாகப்
பராய்த்துறையே னென்றோர்ப் பவளவண்ணர்
துஞ்சிடையே வந்து துடியுங் * கொட்டத்
துண்ணென் றெழுந்திருந்தேன் சொல்ல மாட் [டேன்
புஞ்சடையின் மேலோர் புனலுஞ் சூடிப்
புறம்பயநம் மூரென்றே போயினாரே.

திருப்புறம்பயம்-திருத்தாண்டகம்-6

மிறைபடுமிவ் வுடல்வாழ்வை மெய்யென்றெண்ணி
வினையிலே கிடந்தழுந்தி வியவே னெஞ்சே
குறைவுடையார் மனத்துளான் குமரன் றாதை
கூத்தாடுங் குணமுடையான் கொலைவேற் கை [யான்
அறைகழலுந் திருவடியுஞ் சிலம்பு மார்ப்ப
வவனிதலம் பெயரவரு நட்ட நின்ற
நிறைவுடையா னிடமாநெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

திருநெய்த்தானம்-திருத்தாண்டகம்-6

சிவபெருமான் எல்லாக் கூத்திலும் வல்லவர். இவருக்குச் சிறப்பாகக் காட்டப்படும் மேற்குறித்த இருவகைக் கூத்துமாத்திரமன்றிக் காமனுடிய பேடு நீங்கலாக ஏனைய பத்தும் ஆடவல்லவர்:—

அஞ்சனைக் கணையி னானை யழலுற வன்று நோக்கி
அஞ்சனைக் குழலி னானை யமுதமா வணைந்து நக்கு
அஞ்சனை யஞ்சு மாடி யாடர வாட்டு வார்தாம்
அஞ்சனை வேலி யாரூ ராதரித் திடங்கொண் டாரே,

என்றார் அப்பர்.

சிவபெருமானை நோக்கி யாடும் ஆடல் வேத்திய லென்று கண்டோம். சிவபெருமான் ஆடும் திருக்கூத்தோ பொதுவியலே. இதனாலேயே அவனுடும் திருச்சிற்றம்பலத்தைப் பொது வென மணிவாசகப்பெருமான் மொழிந்தார் போலும். உலகமாயையை நீக்குவதற்கும் அவ்வாறு நீக்கலாய் நாம் செய்யக்கூடிய தொண்டு வெளித்தொண்டாயிராமல் திரிகரண சுத்தியாய் உள்ளன்புடன் விளங்குவதற்கும் எம்பெருமான் ஆடல் துணைசெய்யும். இக்கருத்தை ஒருவகையில் திருநாவுக்கரசர் திருவாக்காலறுமானிக்கலாகும்:—

பொய்யினைத் தவிரவிட்டுப் புறமலா வடிமை செய்ய
ஐய நீ ! யருளிச் செய்யா யாதியே! யாதி மூர்த்தி !
வையகந் தன்னின் மிக்க மல்குசிற் றம்பலத்தே
பையநின் னாடல் காண்பான் பரம நான் வந்தவாறே.

* (i) "கொடு கொட்டி யாட்டம்:—
கொள்ளைக் குழைக் காதிற் குண்டைப் பூதங்
கொடுகொட்டி கொட்டிக் குனித்துப்பாட
வுள்ளங் கவர்ந்திட்டுப் போவார் போல
வுழிதர்வர்நான் றெரியமாட்டேன் மீண்டேன்"

திருவெண்காடு - திருத்தாண்டகம் 5.

(ii) "கொல்லேறுங் கொக்கரையுங்
கொடுகொட்டியுங் குடமூக்கி லங்கொழிய"

திருப்புறம்பயம் - திருத்தாண்டகம் 8.

* துடி - காலை முழவு



# வில்லி பாரத விளக்கம்

## சபா பருவம்.

### சூதுபோர்ச் சருக்கம்.

ஆடிசன் (Addison)என்னும் ஆங்கில அறிஞர் தா னெழுதிவந்த ஸ்பெக்டேடர் என்னும், இக்கலா நிலயம் போன்ற ஓர் பத்திரிகையில்,

894.வது பக்கத் தொடர்ச்சி.

வரைந்துள்ள கட்டுரைகள் சில இங் கெடுத் துரைக்கற் பாலன:

'மனிதருடைய நன்மதிப்பி லொருவ னுயர்வானானால், அவன தறிவுமுதிர்ச்சியை யிகழ்தலும், அவனைப் பலவாறு பழித்தலும் மானிடர்க்கியல்பு. அவனோடு ஒப்ப எண்ணப்பட்டவர்களெல்லாம், அவனுயர்ந்து தாம் முன்னின்ற நிலையிலேயே நிற்பதைப் பிறர்காண்பரேல், தமது வளர்ச்சியின்மை தம் அறிவின் குறைவாலென் றன்னுவரோ யென் றழுங்குவார். அவனைவிட உயர்ந்த படியிலிருந்தவரெல்லாம், அவன் தமக்கொத்த புகழைக்கொண்டு விட்டதால், தமக்குத் தனிச் சிறப்பில்லாமற்போயதே யென்று சினங்கொள்வார்.' என்று அடிஸன் மானிடவியல்பை நுண்ணிதி னறிந்து நவின்றார். இவர் அக்காலத்திலிருந்த ஆசிரியருள்ளும் கவிஞருள்ளும் தலைமை வாய்ந்திருந்தவர். இங்ஙன மிருப்ப, ஈதெழுதிய இரண்டு வருடங்களுக்கெல்லாம், இதுவரையிவர் நண்பனாயிருந்து இவரால் ஆதரிக்கப்பெற்ற போப் என்னும் இளைஞன், பன்னீராட்டைப் பிராயத்தான், அடிசனைப்போற் கல்லூரிகளில் நல்லாசிரியரையடுத்து முட்டுப்பட்டுக் கல்விகற்காத கலைஞன், அச் சிறுவயதிலேயே சிறந்ததொரு நூலையெழுதி கவிவாண ரனைவரு மிவன்புலமை யென்னேஎன்று வியந்தனராய்க் கையுறைந்து மூக்கிற்சேர்க்கும்படி செய்தனன். அது முத லவன்புக ழெங்கும் பரவலாயிற்று. அதுகண்ட அடிசனும் அப்பா லவனைக் கீழ்ப்பார்வையால் நோக்க வாரம்பித்தனர். நாகரிக முற்றிய பதினெட்டாம் நூற்றாண்டிலேயே இவ்வாறு நிகழ்ந்ததெனின், பல்லாயிர வருடங்களுக்கு முன்னிருந்த கன்ன துரியோதனர் பொறாமை கொள்ளல் வியப்போ?

துரியோதனன் முதலோர் தம் நகரடைந்த மறுநாள் அவனதவையில் அரச ரனைவருங்கூடி மன்னனை வணங்கித் தத்தந் தவிசிலிருந்தார்.

இறைஞ்சிய வேந்தர்க் கெல்லா
மிருப்பளித் தெதிர்ந்த வேந்தர்
நிறஞ்செறி குருதி வேலா
னினைவினோ டிருந்த போதி
லறஞ்செறி தானம் வண்மை
யளவிலா தளித்து நாளும்
புறஞ்சுவர்க் கோலஞ் செய்வான்
பூபதிக் குரைக்க லுற்றான்.

[வணங்கிய அரசர்களுக்கெல்லாம் இருக்க ஆதனமளித்து பகைத்தெதிர்ந்த அரசர்களது மார்பிற் பாய்ந்து இரத்தம் பூசப்பெற்ற வேலாயுதத்தையுடைய துரியோதனன், மனதில் கவலைகொண்டு இருந்த சமயத்தில், தருமவழியிற் சேர்ந்த கொடையையும், தானத்தையும் தினமும் அளவில்லாமல் செய்து, சுவரினது வெளிப்பக்கத்தில் அழகு செய்யும் கன்னன், நிலத்தையாளும் துரியோதனனுக்குச் சொல்லத் தொடங்கினான்]

இச்செய்யுளை அந்வயப்படுத்திப் பொருள்கூறின், போரில் மாற்றாரை வெல்லுந் துரியோதனன் தன்னை வணங்கிய வரசருக்குத் தக்க விருக்கையைத் தந்து கவலையோடிருந்த வமயத்திற் கன்னன் கூறினனென்று பொருள் தோன்றும். ஆயினுங் கவி யிங்கொரு பொருணயந்தோன்றக் கூறியிருப்பது, கூர்ந்து நோக்கின் வெளியாகும். வணங்கினாரை யாதரித்தலும், வணங்காதாரை வெறுத்தலும் உத்தமர் தொழிலாகாது. அது கடைப்பட்டார் செயலே. தன் காலைத் தொட்டுக் கும்பிடுவாரைத் தான் கும்பிடுவதில் மேன்மை யென்னவுண்டு? அதுபற்றித்தான் கிறித்தவர் குலகுருவாகிய இயேசுவும் தன் மாணவரை நோக்கி 'உம்மைப் பெருமை படுத்துவாரையே நீரும் பெருமைபடுத்தினால் உமக்கதனா லென்ன சிறப்புளது? நம்மைப் பகைத்து வருத்தும் பாரிசேகரும் மற்றவர்களும் அவ்வாறே செய்யவில்லையோ? அங்ஙனமாயின் நீவி ரவரைவிட வுயர்ந்தோராகமாட்டீரே. ஆகையால் உமக்குத் துன்பஞ் செய்தவர்களுக்கு நன்மையே நாடுங்கள்; உங்களை வருத்துகிறவர்களுக்குலகில் மகிழ்ச்சியே யுண்டாகப் பிரார்த்தியுங்கள். உங்களை யொரு கன்னத்தி லறைவார்க்கு மற்றொரு கன்னத்தையுங் காட்டுங்கள்', என்று பலவாறு தெருட்டியுள்ளார்

'இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்'

எனத் தேறியவறிவிற் றிருவள்ளுவரும் மொழிந்தது, உத்தம விலக்கண நிறைந்தாராய் மானுடர் வாழ்தற் பொருட்டேயாம்.

துரியோதனன் உயரிய குணங்களைப் படைக்காதவன். தன்னறிவிற் கேற்ப, நண்பரை நயந்தும், ஏதிலாரை எதிர்த்தும் உயிர் வாழ்ந்தவன். தனதெண்ணத்திற்கேற்ப வுரையாடுபவரே தனக்குகந்த நண்பரா யெண்ணினன். அதனால் அவனுக்கு மாறுயுரைப்பவரெல்லாம்,உண்மைநேச ரல்லரென் றவரையுதாசனித்தான்.

இந்திரப் பிரத்தத்திற் கண்ட காட்சிக ளவன்கண் முன் நின்றன. பாண்டவர்களது செல்வமும், அவர் திக்குவிசயஞ் செய்து அரசர்களை யாட்கொண்ட வாற்றலும், தேவரும் பிறரும் அவருக்குப் பணிவிடை செய்ய ஒருவருக்கொருவர் முந்தியதும் அவனுக்குக் கவலையை யூட்டி யவனை நினைவினோடிருக்கச் செய்தன. அந்தோ தரும! நீ யேன் நற்குணம் படைத்தாய்? உன்னை யனைவரும் விரும்புவதேனோ? நீ தாழ்மையும், ஆண்மையும், பொறுமையும் படைத்ததெதற்காகவோ? இராசசூய யாகஞ் செய்யவேண்டுமென்றேனோ வெண்ணினாய்? நாரதன் குண்டுணியென்பதை மறந்தாயோ? உனது புகழ் பிறருக்குவசையாவதை யறிந்திலையோ? சிப்பியிற் றோன்றுந் தரளம் அதனுயிர்க்கே வினையாவதுபோல், நின்னொடு தோன்றிய நற்குணங்கள் நினக்கே தீங்கு விளைவிப்பன வென்பதை யறியாய்போலும்?

தனது தலைவன் கொண்ட கவலையைக் கண்ட கன்ன னவனைத்தேற்றுவான் றொடங்கி தகவிலாது

அவனுக்குச் சில புன்மொழிகளைப் புகன்றான். கொடையிற் சிறந்த கன்னனை யக்கொடை காரணமாயாசிரியர் பழிக்கத் தொடங்கினர். தானம் வண்மை யென்பன வொருபொருட் பன்மொழிகளேயாயினும், 'அறஞ் செறி தானம்' என்பது தக்கார்க் கீயுந் தானமாம். பாத்திர மறிந்தே பிச்சையிடுவது, ஐயமிடுவோர்க்கழகு. அதுதான் நன்னெறி யுய்க்கும். அளவிலாத வண்மை தகவிலார்க்கு மளிக்கப்படுதலால், அவரது தீநெறியின் செல்லு மக்கொடைதான், கொண்டவனையுங் கொடுத்தோனையு மொருங்கே மண்ணிலிழுத்து மாசுணச்செய்கின்றது.

களிமண்ணாற் செய்யப்பட்ட சுவர், கந்துளங்களாலரிக்கப்பட் டுள்ளுடைந்துபோயிருப்பினும், அதனைச் செம்மைப்படுத்த முயலாது, சுவரின் வெளிப்புறத்தைமட்டும் வெண்மையாக்கி அதன்மேற் சித்திரமெழுதி யலங்கரிக்கும் பேதை மாந்தரைப்போல், கன்னன் பொறாமை முதலிய அகக் குற்றங்களைக் களைய முயலாது, வெளிப்பகட்டாய்ப் பலர் கண்டு புகழும்படி கொடைசெய்து வந்தானென்பது வில்லியின் கருத்து. திருப்பள்ளியெழுச்சியைப் பாடிப் புகழ்பெற்ற தொண்டரடிப்பொடியாழ்வாரின், திருமாலைச் செய்யுட்களி லொன்றாஞ் செய்யுளாகிய

மறஞ்சுவர் மதிளெடுத் துமறு
மைக்கே வறுமை பூண்டு
புறஞ்சுவ ரோட்டை மாடம்
புரளும்போ தறிய மாட்டீர்
அறஞ்சுவ ராகி நின்ற
அரங்கனார்க் காட்செய் யாதே
புறஞ் சுவர்க் கோலஞ் செய்து
புட்கவ்வக் கிடக்கின் றீரே.

என்பதை யடியொற்றி யெழுதப்பட்ட திச் செய்யுளும். இது முன்னரே நமது தோற்றுவாயிற் காட்டப்பட்டது. இயேசுகிறிஸ்துவும், பாரிசி சாட்டுசி யென்னும் வகுப்பாரை நோக்கி, 'நீவிர் புட்கவ்வக் கிடக்கும் பிணத்தின்மேற் கட்டப்பட்ட சமாதிச் சின்னங்களென, பார்வைக்கு ஐந்தவித்தார்போ லாட்டங்காட்டி, நாட்டாரை வஞ்சித்து, மனத்தூய்மையடையாது உள்ளுடைந்து கிடக்கின்றீ''ரென்றார். உள்ளொன்று வைத்துப் புறத்தே தத்துவம் பேசியும் பிறரைக் கண்டவழி இரப்போர்க்கீந்தும், காணுவழியவரை வைதும், பலர் குழுமிய சந்தைக் கூட்டங்களிற் காவியுடுத்து வெண்ணீறு பூசி உருத்திராக்ஷத்தைக் கையிலெடுத்தெண்ணியும் உடலை யீசனுக்கேயர்ப்பணஞ் செய்துவிட்டோமென்று பலவகையிலதை யூறுபடுத்திக் கண்டோரெல்லாம் புகழத் திரிதரு மறிவிலிகளே புறஞ்சுவர்க் கோலஞ் செய்பவர். இவ்வாறு 'சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்து' நிற்பாரோடு கன்னனையு மொன்றுகூட்டிக் கூறிய தெவ்வகையிற் பொருந்துமென்று இச்சருக்கத்தின் முன்னுரையி லாராயப்பட்டது.

'கர்மண் யேவ அதிகாரஸ்தே மா பலேஷு கதாசன'

[ஒருவன் ஒரு கருமத்தைச் செய்யமட்டும் அதிகாரம் பெற்றவனே யொழிய, அதன் பலாபலத்தைக் கருதத்தக்கவ னல்லன்]

என்னு முண்மையைக் கன்ன னறிந்திருந்தானோ? இல்லையேல், யாது பலன் கருதினான்? புறஞ் சுவர்க் கோலஞ் செய்வான் அறஞ்சேறி தானஞ் செய்ததெதற்கு? இவற்றை யன்பர் ஆராய்வாராக.

தாதவிழ் குவளை மாலைத் தருமன்மா மதலை பெற்ற
மேதகு வேள்விச் செல்வம் வேந்தரில் யாவர் பெற்றா
ரேதுள வவன்றன் வாழ்க்கை யாரினி யெதிருண் [டென்று
பாதக நினைவைத் தானும் பகர்ந்தனன் பரிவு கூர.

[மகரந்தப் பொடிகளைக் கொட்டும் குவளைப் பூமாலையை யணிந்த இயமனது சிறந்த புத்திரன் அடைந்த மேலான இராசசூயத்தைச் செய்யுஞ் சிறப்பு அரசர்களில் யார் பெற்றார்; அவனது செல்வ வாழ்க்கைக்கு அளவேது; அவன் முன் நிற்பவர் யாவருளர்; என்று பாவத்துக்கு ஏதுவான எண்ணத்தைத் தானும் துரியோதனனிடத்து அன்பு மிகுதலால் கூறினான்].

செய்ந்நன்றி கொல்லா மகனாகிய கன்னன் றனதுயிர்த் துணைவனும் யாவருக்குந் தலைவனுமான துரியோதனன் கவலைகொண் டிருப்பதைத் தாங்காதவனாயச்சமயம் யாவர் மனதிலும் நிறைந்திருந்த வெண்ணத்தை வெளியிட்டான். அந்நினைவு பாண்டவர்க்கும் பாதகமாயது. பொதுவி லது பாவமுமாம். பாதகன் நினைவையு மிவனே பகர்ந்தனனென் றாசிரியர் கூறாது விடுத்ததேனோ?

இராசசூய யாகஞ்செய்த வரசர்பல ரிருப்பினும், மயனா லமைத்துத்தரப்பட்ட மண்டபம் பெற்றதும், திருமாலி னவதாரமாகிய கிருஷ்ண னுடனிருந்து செய்துவைத்த பெருமையும், தருமனுக்கே யுரியன. இயற்கையிலேயே யெல்லா நற்குணங்களும் பொருந்தியவன், யாகமுஞ் செய்து, எங்கும் பொங்கும் புகழ் பெற்றபின் அவனை வெல்லலரிது.

விதரண விநோதன் சொன்ன
வார்த்தையும் வேந்தர் வேந்தன்
இதயமு மொன்றாய் நின்ற
வியற்கையைச் சகுனி கண்டு
புதைநக மடங்க னாலும்
புறஞ்செலா தொடுங்கு மானால்
மதகரி விடுமோ வென்றான்
வசையிசை யாகக் கொள்வான்.

[கொடையையே பொழுதுபோக்காக உடைய கன்னன் சொன்ன வார்த்தைகளும், அரசருக்கெல்லாம் அரசனான துரியோதனனது உள்ளமும் ஒன்றுபட்டு நிற்பதைக் கண்டு, பிறர் சொல்லும் வசையையே தனக்குப் பெரும்புகழாகக் கொள்பவனான சகுனி, நகங்கள் தனது பாதத்தின் உள்ளடங்கப்பட்ட சிங்கம் நாள்தோறும் வெளிச்செல்லாமல் குகையிலேயே ஒளிந்து கிடக்குமானால், மதங்கொண்ட யானை அதனைச் சும்மாவிருக்க விடுமோ, என்று சொன்னான்.]

வேறுவகையிற் றனக்குக் காலஞ் செல்லாமையின், பொழுது போக்கிற்காகக் கன்னன் கொடையை மேற்கொண்டனனும். ஷேக்ஸ்பிய ரெழுதிய நாடகமொன்றில், காலம் எவரிடத்தில் நிற்கு மென்றும், யாரிடத்திற் குதித்தோடு மென்றும், எவருக்குப் பறந்து செல்வதாய்த் தோன்று மென்றும் விநோதமாய்ச் சொல்லப்பட்டுளது. அதில் காலங் கடவாமல்நிற்ப தெவருக்கென்றால், கோடைக் காலத்தில் விடுமுறையடைந்த சொல்லேருழவரான நியாயவாதிகளுக் கென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களும், வருவாயிலேயே கண்ணுடையவராய், சட்டநூற்களை விடுத்து



வேறு நூற்களை யோதாதவராய், விடுமுறைக் காலத்திற் றயின்றுதுயின்று காலஞ்செல்லா திடர்ப்படுவர். கன்னன் பிறிதொரு வகையிற் காலங் கழிக்கத் துணிந்தான். அது கொடைசெய்வதே யாம். இடையெழு வள்ளல்களி லொருவனாய்க் கருதப்பட்டு, 'வைய நின்னது மாநகர் நின்னது வெய்ய வாசியும் வேழமும் நின்னவே' யென்று தனது செல்வமுழுவதையும் கௌசிகமுனிவனுக்கீந்து, தேவராலும் மூவராலும் புகழப்பெற்ற அரிச்சந்திரனுடன் சமமாயெண்ணப்படும் கன்னனுக்கு வேறு செயலில்லாமற் போயதாம். அவ்வாறு விநோதத்திற்காவது, அறநெறியைக் கைப்பிடித்திருப்பினும், அவனது வள்ளண்மையை நாடிவந்த பெரியோர் சேர்க்கையாலுமவன் கிருதார்த்தனாகாமற் போயது விந்தையே.

தனது மருகனுடைய மனத்தளர்வைக் கண்ட சகுனி, அவனைத் தேற்றும் வழி யாதென வாராய்ந்தான். ஆன்ற கேள்விப்பய னுணரா னாதலால், அவனறிவிற்கொரு யுக்தி தோன்றிற்று. 'மனதை யூறுபடப் பேசி யேளனஞ் செய்வதே சிறந்த உபாயம். ஆயினும் அண்ணலைச் சாலவும் தாழ்த்திப் பேசுவது நேரிதன்று. அவனைச் சற்றே யுயர்த்தியே கூறவேண்டும்.' என்று எண்ணினவனாய்த் துரியோதனனை யரியாயுந் தருமனைக் கரியாயு முருவகப் படுத்தினான். 'கோளரியின் கொடுநகங் கொல்வதற்கென் றேற்பட்டுள்ளது. அதனை யுள்ளிழுத்துக் குகையிற் சிங்க மொடுங்கியிருப்பின், யானை யேன் மதங்கொண்டு திரியாது? உனக்குப் பகைவரை வெல்லப் போதிய கருவிகளிருந்தும் அவற்றை யுபயோகியாது அச்சங்கொண்டிருப்பையேல், உன்னிலுங் கீழ்ப்பட்டார் உன்னை யடர்த்தற்குந் தொடங்குவர்.' என்று பழிமொழியே தனக்கணிகலனாய்க்கொண்ட சகுனி மொழிந்தான். இவனதுபமான மிவ னறிவிற்கேற்ப, இயற்கைக்கு விரோதமா யிருப்பதை நோக்குக.

# தமிழ்ப் பாடம் 98.

[ அஷ்ட பிரபந்தம். ]

[ 887-வது பக்கத் தொடர்ச்சி ]

## திருவரங்கக் கலம்பகம்.

திருவரங்கத்தந்தாதியிற் சில செய்யுள்கள் கற்றோம். இனி, அஷ்டபிரபந்தத்துள் அடங்கிய மற்றொரு பிரபந்தமாகிய திருவரங்கக் கலம்பகத்திற் சில செய்யுள்கள் கற்போம். கலம்பகமாவது, பற்பலவித செய்யுள்களால் பாட்டுடைத் தலைவனது (hero) புகழையும் பெருமையையும் பற்பலவிதமாகக்கூறிப் பாராட்டும் நூலாகும். திருவேங்கடமாலையிலுள்ள செய்யுள்களெல்லாம் 'வெண்பா' என்னும் ஒரேவித செய்யுள்களால் ஆனவை. திருவரங்கத்து மாலையிலும் திருவரங்கத்தந்தாதியிலும், வந்துள்ள செய்யுள்கள், கட்டளைக் கலித்துறை என்னும் ஒரே விதத்தன. கலம்பகத்திலோ செய்யுள்கள் இப்படி ஒரேவிதமாக இரா. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, என்னும் பாக்களும் இவைகளது இனமாகிய விருத்தம், துறை, தாழிசை முதலிய செய்யுள்களும் கலந்துவரும். 'மாறன் பாப் பாவினம்' என்னும் நூலை நம் பத்திரிகையில் பதிப்பித்து வந்தபோது, செய்யுள்களில் எத்தனை விதங்கள் இருக்கின்றன என்பதை ஒருவாறு தெரிந்துகொண்டிருக்கலாம். நாம் யாப்பிலக்கணம் எழுதும்போது அவைகளைப்பற்றி நன்கு கற்போம். இப்பொழுது கலம்பகம் என்னும் நூல் பலவிதமான செய்யுள்களால் அமைந்தது என்பது தெரிந்துகொண்டால் போதும்.

இக் கலம்பகத்தின் தலைவன் திருவரங்கநாதன். தானோர் விண்ணப்பம் செய்துகொள்வதற்காகக் கவி ஸ்ரீரங்கநாதனைக் கூப்பிடுவதும், கூப்பிட்டு அவ்விண்ணப்பத்தைச் செய்துகொள்வதும் முதற்செய்யுளில் அடங்கியிருக்கின்றன. எம்பெருமான் பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் வைபவத்தைப் பாராட்டி முதலில் அழைக்கின்றார்.

சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசில் வீற்றிருக்கு
நீர்பூத்த திருமகளு நிலமகளு மடிவருடச் [கேட்ப
சிறைப்பறவை புறங்காப்பச் சேனையர்கோன் பணி
நறைப்படலைத் துழாய்மார்பி னாயிறுபோன் மணி [விளங்க
வரியதான வர்க்கடிந்த வைம்படையும் புடைதயங்கக்
கரியமால் வரைமுளரிக் காடீன்று கிடந்தாங்குப்
பாயிரநான் மறைபரவப் பாற்கடலுட் பருமணிச்சூட்
டாயிரவாய்ப் பாம்பணைமே லறிதுயிலி னினிதமர்ந் [தோய்!

பதப்பிரிவு:—சீர் பூத்த செழும் கமலம் திரு தவிசு இல் வீற்றிருக்கும் நீர் பூத்த திருமகளும் நிலமகளும் அடி வருட, சிறை பறவை புறம் காப்ப, சேனையர் கோன் பணி கேட்ப, நறை படலை துழாய் மார்பில் நாயிறுபோல் மணி விளங்க, அரிய தானவர் கடிந்த ஐ படையும் புடை தயங்க, கரிய மால் வரை முளரி காடு ஈன்று கிடந்த ஆங்கு, பாயிரம் நால் மறை பரவ பால் கடலுள் பரு மணி சூட்டு ஆயிரம் வாய் பாம்பு அணைமேல் அறி துயிலின் இனிது அமர்ந்தோய்.

பதவுரை.

சீர்-சிறப்பு, பூத்த-பொருந்திய, செழு-செழுமையான, திரு-அழகிய, தவிசு இல்-ஆதனத்தில், வீற்றிருக்கும் - பெருமையோடு அமர்ந்திருக்கின்ற, நீர் - கடலில், பூத்த-அவதரித்த, திருமகளும்-இலக்குமியும்; நிலமகளும்-பூமிதேவியும், அடி-(உனது) பாதங்களை, வருட-தடவவும்—

சிறை-சிறகுகளை உடைய, பறவை-பறவையாகிய கருடன், புறம்-(உன்)பக்கத்திலிருந்து, காக்க-காவல் புரியவும்—

சேனையர் - பரமபதத்தில் இருக்கும் நித்திய சூரிகளுக்கு, கோன் - தலைவராகிய சேனாபதி முதலியார், பணி - (நீ இட்ட)வேலைகளை, கேட்ப - கேட்கவும்—

நறை - தேன் பொருந்திய, படலை - மாலையாகிய, துழாய் - துளசியால் அலங்கரிக்கப் பெற்ற, மார்பில்- (உனது) மார்பில், நாயிறுபோல் - சூரியனைப்போல், மணி - கவுஸ்துபம் என்னும் இரத்தினம், விளங்க - பிரகாசிக்கவும்—

அரிய - வெல்வதற்கு அருமையான, தானவர் - அசுரர்களை, கடிந்த - அழித்த, ஐம் - (உனது)ஐந்து, படையும் - ஆயுதங்களும், புடை - பக்கத்தில், தயங்க - விளங்கவும்—

பாயிரம் - ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை முதலில் பாயிரமாகச் சொல்லப்படுகிற, நால் - நான்கு, மறை - வேதங்களே, பரவ - (உன்னைச் சுற்றிநின்று) தோத்திரம் செய்துகொண்டிருக்கவும்—

கரிய - கருமையான, மால் - பெரிய, வரை - மலையொன்று, முளரி - தாமரையாகிய, காடு - காடு, ஈன்று - பூத்து, கிடந்தாங்கு - கிடப்பதுபோல,

பரு - பெரிய, மணி - மாணிக்கங்களை, சூட்டு - கொண்டையில் உடைய, ஆயிரம் - ஆயிரம், வாய் - வாய்களோடுகூடிய, பாம்பு - ஆதிசேடனாகிய, அணை மேல் - படுக்கையின்மேல்,

பால் கடலுள் - பாற்கடலில், அறி - எல்லாவற்றையும்அறிந்துகொள்ளும்,துயிலின் -யோகநித்திரையில், இனிது - இனிமையாக, அமர்ந்தோய் - இருக்கின்ற திருமாலே!

குறிப்பு:—இவ்விதம் திருமாலை அழைத்த கவி, அவனது விக்ரகரூபமாக அரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானை, இனிப் பின்வருமாறு அழைக்கின்றார்.

மண்ணகந் துயர்நீங்க வானகந் தொழுதேத்தக்
கண்ணகன் சோணாட்டுக் காவிரிவாய்ப் புளினத்துப்
பம்புகதிர் விசும்பிரவிப் பசும்புரவி வழிவிலங்கு [யி
செம்பொன்மதி லேழுடுத்த திருவரங்கப்பெருங்கோ
லாணிப்பொற் றகடுரிஞ்சு மணிக்கதவ நீள்வாயின்
மாணிக்க வெயில்பரப்பும் வயிரமணி விமானத்துண்
மின்னிலங்கு தொடிவலய வியன்வலக்கை கீழ்கொடுத்
[துத்
தென்னிலங்கைத் திசைநோக்கித் திருநயனந் துயில்
வோய்கேள்.

பதப்பிரிவு:—மண் அகம் துயர் நீங்க வான் அகம் தொழுது ஏத்த கண் அகல் சோழநாட்டு காவிரிவாய் புளினத்து பம்பு கதிர் விசும்பு இரவி பசும் புரவி வழி விலங்கும் செம்பொன் மதில் ஏழு உடுத்த திரு அரங்கம் பெரும் கோயில் ஆணி பொன் தகடு உரிஞ்சும் அணி கதவம் நீள்வாயில் மாணிக்கம் வெயில் பரப்பும் வயிரம் மணி விமானத்துஉள் மின் இலங்கு தொடிவலயம் வியன் வலம் கைகீழ் கொடுத்து தென் இலங்கை திசை நோக்கி திரு நயனம் துயில்வோய் கேள்.

பதவுரை.

மண் அகம் - பூலோகத்தில் இருப்பவர்களுடைய, துயர் - துன்பங்கள், நீங்க - நீங்கவும்; வான் அகம் - வானலோகத்திலுள்ள தேவர்கள் வந்து, தொழுது - வணங்கி, ஏத்த - துதிக்கவும்,

கண் அகல் - இடம் அகன்ற, சோழநாட்டு - சோழநாட்டில் பாயும், காவிரிவாய் - காவேரிநதியின் நடுவில் உள்ள, புளினத்து - மணல் திட்டையாகிய திருவரங்கத்திலே—

பம்பு-மிகுகின்ற, கதிர் - கிரணங்களை உடையதாய், விசும்பு - ஆகாசத்தில் செல்கின்ற, இரவி - சூரியனது, பசும் - பச்சை நிறமுள்ள, புரவி - குதிரைகள், வழி - தாம் செல்லும் வழியிலிருந்து, விலகும் - விலகிப்போகின்றபடி செய்யும், செம் - சிவந்த, பொன் - பொன்னாலாகிய, மதில் - மதிற்சுவர்கள், ஏழு - ஏழு, உடுத்த - சூழ்ந்திருக்கின்ற, திரு - அழகிய, அரங்கம் - அரங்கம் என்னும், பெரும் - பெரிய, கோயில் - கோயிலில்—

ஆணிப்பொன் - ஆணிப்பொன் என்னும் மிகவும் சிறந்த பொன்னாலாகிய, தகடு - தகடுகள், உரிஞ்சம் - பதிக்கப்பெற்ற, அணி — அழகிய, கதவம் - கதவுகளை உடைய, நீள் - நீண்ட, வாயில் - கோபுரவாயிலில் மாணிக்கம் - மாணிக்கத்தினது, வெயில் - பிரகாசத்தை, பரப்பும் - வீசுகின்ற, வயிரம் - வயிரமும், மணி-மாணிக்கமும் இழைத்த, விமானத்துள் - விமானத்தினுள்ளே—

தொடி - கங்கணமும், வலயம் - கடகமும்அணிந்த, வியன் - பெரிய, வலக்கை — வலதுகையை, கீழ் கொடுத்து - (உனது தலையின்) கீழே வைத்துக் கொண்டு, தென் - தெற்கில், இலங்கை - இலங்காபுரியிருக்கின்ற, திசை - திசையை, நோக்கி - பார்த்த வண்ணமாய், திரு — அழகிய, நயனம் - கண்கள், துயில்வோய் - வளர்கின்றவனே! கேள் - அடியேன் சொல்வதைக் கேட்டருள்.

குறிப்பு:—இதன்பின் வரும் பல அடிகளை விட்டு விட்டோம். இவ்விதம் திருமாலையும், அத்திருமாலின் விக்ரக உருவமான திருவரங்க நாதனையும் கூப்பிட்டுக் கவி தனதுவிண்ணப்பத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றார்—

மலர்தலை யுலகத்துப் புலமை சான்ற
பதின்மரும் பணித்த பாட லோதையொடு
முதுமறை கறங்க முரச மார்ப்ப
வலம்புரி பிளிறும் பொலம்புரி கோயில்
ஆழியஞ் செல்வ வாதியம் பரம
வாழி வாழி மாயோய் வாழி
நெடியோய் வாழி நின்மாட் டொன்றே
அடியேன் வேண்டுவ தஃதுநீ மறக்கேல்
பூவரு மயன்முதல் யாவரு மறியா
மூவுல களந்தநின் சேவடி வாழ்த்தித்
தொழுதகைத் தொண்டர்தந் தொண்டருட்
[சேர்க்கா
தெழுவகைத் தோற்றத் தின்னுப் பிறப்பின்
என்பொழி யாக்கையுட் சேர்ப்பினு மவர்பால்
அன்பொழி யாமை யருண்மதி யெனக்கே.

பதப்பிரிவு:—மலர் தலை உலகத்து புலமை சான்ற பதின்மரும் பணித்த பாடல் ஓதையொடு முது மறை கறங்க முரசம் ஆர்ப்ப வலம்புரி பிளிறும் பொலம் புரி கோயில் ஆழி அம் செல்வ ஆதி அம் பரம வாழி வாழி மாயோய் வாழி நெடியோய் வாழி நின்மாட்டு ஒன்றே அடியேன் வேண்டுவது அஃது நீ மறக்கேல், பூ வரும் அயன் முதல் யாவரும் அறியா மூ உலகு அளந்த நின் சே அடி வாழ்த்தி தொழுத கை தொண்டர்தம் தொண்டருள் சேர்க்காது எழு வகை தோற்றத்து இன்னு பிறப்பின் என்பு ஒழி யாக்கையுள் சேர்ப்பினும் அவர்பால் அன்பு ஒழியாமை அருள் மதி எனக்கே.



பதவுரை.

மலர் - அகன்ற, தலை - இடத்தை உடைய, உலகத்து - உலகத்தில், புலமை - அறிவு, சான்ற - மிகுந்த, பதின்மரும்-பத்து ஆழ்வார்களும், பணித்த— அருளிய, பாடல்-பாசுரங்களைப்பாடும், ஓதையொடு- ஒலியுடன்; முது - பழமையான, மறை - வேதங்களை ஓதுகின்றவர் செய்யும் ஒலியும், கறங்க - ஒலிக்கவும்; முரசம் — பேரிகைகள், ஆர்ப்ப - சப்திக்கவும், வலம்புரி - வலம்புரிச்சங்குகள், பிளிறும் - ஆரவாரம் செய்யப்பெறும், பொலம்-பொன்னால், புரி-அமைக்கப்பட்ட, கோயில் - திருவரங்கக் கோயிலில் அமர்ந்த,

ஆழி - சக்ராயுதத்தை உடைய, அம் - அழகிய, செல்வ - செல்வனே! ஆதி - ஆதிமூலமாகிய, அம் - அழகிய, பரம - பரமனே! வாழி வாழி - வாழ்வாயாக, வாழ்வாயாக! மாயோய் - மாயவனே, வாழி - வாழ்வாயாக! நெடியோய் - நீண்டவனே, வாழி-வாழ்வாயாக.

அடியேன் - அடியவனாகிய நான், நின்மாட்டு - உன்னிடத்தில், வேண்டுவது - வேண்டுகின்ற வரம், ஒன்றே - ஒன்றுதான். அஃது - அதனை, நீ - நீ, மறக்கேல்-கொடாமல் மறக்காதே, (அதுயாதெனில்)

பூ -தாமரையில், வரும் - தோன்றிய, அயன்முதல் - பிரம்மன் முதல், யாவரும் - ஒருவரும், அறியா - கண்டு அறிய முடியாததும், மூ - மூன்று, உலகு - உலகத்தையும், அளந்த - அளந்ததுமான, நின் - உன்னுடைய, சே - சிவந்த, அடி - பாதத்தை, வாழ்த்தி - வாழ்த்தி, தொழுத - தொழுதவண்ணம் இருக்கின்ற, கை - கைகளை உடையவர்களாய, தொண்டர் தம் - (உனது) அடியார்களது, தொண்டருள் - அடியார்களுள் ஒருவனாய், சேர்க்காது - என்னைச் சேர்க்காமல்,

எழுவகை - (தேவர் மனிதர் பறவை விலங்கு ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்ற) ஏழுவகையான, தோற்றத்து - தோற்றத்தை உடைய, இன்னு - துன்பத்திற்கிடமான, பிறப்பின் - பிறவிகளில், என்பு - எலும்பு, ஒழி - இல்லாத, யாக்கையுள் - உடலாகிய புழுவினுள், சேர்ப்பினும் - என்னை மறு சன்மத்தில் சேர்த்தாலும்,

அவர்பால் - அந்தத் தொண்டாது தொண்டர்களிடத்தில், அன்பு - எனது பக்தியானது, ஒழியாமை - நீங்காததாகிய, மதி - புத்தியை, எனக்கு - எனக்கு, அருள் - கொடுப்பாய்.

## இலக்கணம்

மொழிக்கு இறுதியில், க் ச் ட் த் ப் ற் என்ற வல்லின மெய்களின் ஒன்றின்மேல் ஏறிநின்று ஒலிக்கின்ற உகரம், எப்பொழுதும் தனக்குரிய ஒருமாத்திரையில் குறைந்து அரைமாத்திரை யளவே ஒலிக்குமாதலால் அந்த உகரம், குற்றியலுகரம் என்று அழைக்கப்படுகின்றது. அம்மொழி, வீடு, காது, ஆறு, என்பன போல், இரண்டே எழுத்துக்களை உடையதாயின் முதலெழுத்து நெடிலாக இருந்தால்தான், ஈற்றிலுள்ள உகரம் குற்றியலுகரம் ஆகும். ஆதலின் பசு மடு என்பனபோன்ற சொற்களின் ஈற்றிலுள்ள உகரம், ச், ட் என்ற வல்லின மெய்யின்மேல் ஏறியிருப்பினும் (முதலெழுத்து,ப ம என்னும் குறில்களாதலால்) குற்றியலுகரம் ஆகாது; அது ஒரு மாத்திரையுடைய முற்றியலுகரமே.

இரண்டெழுத்துக்களுக்கு மேற்பட்ட எழுத்துக்களால் ஆனசொற்களில், (மற்ற எழுத்துக்கள் நெடிலாயிருப்பினும் குறிலாயிருப்பினும் நெடிலும் குறிலும் கலந்திருப்பினும்) ஈற்றில் வல்லின மெய்யின் மேல் ஏறிநிற்கும் உகரம்,குற்றியலுகரமே. அவ்வாறு ஏறிநிற்பது வல்லினமெய் அன்றாகில், அவ்வுகரம் குற்றியலுகரம் ஆகாது. கதவு, களவு, மகவு போன்ற சொற்கள் இரண்டெழுத்திற்கு மேற்பட்டனவாயிருந்தாலும், உகரம் ஏறியிருக்கும் வ் என்னும் மெய், வல்லினத்தைச் சேர்ந்தது அன்று, அது இடையினமாகும். ஆகையால் அதன்மேல் ஏறியிருக்கும் உகரம் ஈற்றிலிருந்தாலும், அது குற்றியலுகரம் ஆகாது; முற்றியலுகரமே. அவ்விதமே, ஏழு, என நெடிலை முதலாக உடைய இரண்டெழுத்து மொழியாயினும் ஈற்றுகரம் ஏறியிருக்கும் மெய் வல்லின மல்லாது, ழ் என்னும் இடையினமாதலால், அந்த உகரம் முற்றியலுகரம்.

கொலு, உரு, தெரு, உழு, போன்ற சொற்களில், ஈற்றிலுள்ள உகரம், (வல்லின மெய்யின்மேல் ஏறியிராததாலும், அச்சொற்கள் இரண்டு குறில்களாலானதாலும்,) முற்றியலுகரம் ; குற்றியலுகரமாகாது.

எனின், உகரம் இருவகைஆகின்றது. ஒன்று உயிராகிய முற்றியலுகரம் ; மற்றது அவ்வுயிரின் சிதைவாகிய குற்றியலுகரம்.

நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் உயிரே வருமாயின் அவை உடன்படுமெய் பெற்றுப் புணர்கின்ற விதிகளை முன்கற்றோம். ஆனால், நிலைமொழியிறுதியில் இருப்பது உகரம் ஆயின், புணர்ச்சி விதிகள் பெரிதும் வேறுபடுகின்றன. அவைகளைக் கற்போம்.

பொதுவாக இரண்டுவிதிகளை மனதில் வைத்துக் கொள்ளலாம்:—

i நிலைமொழி யிறுதியில் முற்றியலுகரமும், வருமொழி முதலில் உயிரெழுத்தும் நிற்குமாயின் அவை வகர உடன்படுமெய் பெற்றுப் புணரும்:—

பசு + எங்கே = பசு வ் எங்கே = பசுவெங்கே.

கொலு + அமர்ந்தான் = கொலு வ் அமர்ந்தான் = கொலுவமர்ந்தான்.

புழு + ஓடியது = புழு வ் ஓடியது = புழுவோடியது.

ii நிலைமொழி யிறுதியில் குற்றியலுகரமும், வருமொழி முதலில் உயிரெழுத்தும் நிற்குமாயின், அவை வகர உடன்படுமெய் பெற்றுப் புணரமாட்டா.

அக் குற்றியலுகரம் தான் ஏறியிருந்த மெய்யை விட்டுப் போய்விட, அந்த மெய்யின்மேல் வருமொழி முதலில் இருந்த உயிர் ஏறிக்கொள்ளும்:—

காடு + இது = காட்உ + இது = காட் + இது = காடிது

பந்து + ஆட்டம் = பந்த்உ + ஆட்டம் = பந்த் + ஆட்டம் = பந்தாட்டம்

முரசு + அடி = முரச்உ + அடி = முரச் + அடி = முரசடி

# நம்மாழ்வார் வைபவம்.

பெரிய திருவந்தாதி ஆராய்ச்சி.

892 பக்கத் தொடர்ச்சி

திருவாசிரியத்தில் ஆழ்வார் தம் மனதில், வரகவிகளுக்கு எழும் அற்புதத் தோற்றங்களை எட்டிப் பிடித்துத்தரித்து அமைத்து அவைகளைப் புலமைத்திறத்தால் நமக்குணர்த்த வல்லவரென்று காட்டிக்கொடுத்தார். அதன்வியப்பை ஒருவாறு கூறினோம். பெரியதிருவந்தாதியில், மனதில் எழும் சங்கைகளும் தேர்ச்சிக் குறைவுகளும் எழவிடாமலும், அங்குரிக்கும் அன்பு நம்பிக்கை இவைகளை வளர்த்தும், ஒருவாறு நாணும் தைரியக் குறைவாலும் ஏங்கிக்கிடக்கும் இஷ்டக்குறைவுகளைத் தேற்றியும் தம் திருவுள்ளத்திற்கு ஆற்றலும் வலிமையும் ஊட்டுகின்றார். இதுவே இவர் கருத்தென்று இவர் முதற்பாசுரமே காட்டிக் கொடுக்கின்றது. "முயற்றி சுமந்து எழுந்து முந்துற்ற நெஞ்சே"(கற்பித்தபாடங்களைச்செவ்வனேகற்று முயன்று அவைகளைத்தரித்து சுமந்து அதினால் மேல் ஏறி எழுந்து அச்சம் நாணம் தவிர்த்து முன்வந்த நெஞ்சே) "பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற காவிமலரும் போன்ற வண்ணமுற்றவர்" புகழை "நயப்புடைய நாவின் தொடை கிளவியுள் பொதிவோம் இயற்றுவாய் எம்மோடு கூடி" நீ வாவென்று அழைக்கிறார். தம் "நெஞ்சு அடிமை செய்யென்றால் செய்யாது" (32) "தாம் செய்யும் தீவினைக்குத் தாழ்வுறத்தி", "தாமோதரனுக்கு அடிமை செய்யென்றால்" செய்யவில்லை, என்று (அவரோடு) நெஞ்சைப் பற்றிக் குறைவு கூறுகிறார். திருமால் ஒருவருக்கு உணர எளியவனோ என்கிற சங்கையை (29)-நெஞ்சே நீயேன் பயப்படுகிறாய். அவன் நிரம்ப சுலபன்; தன்னை உணருபவர் எவ்வளவு எளியரோ அவ்வளவாக நிற்கிறான். - "உணரத் தனக்கு எளியர் எவ்வளவர் அவ்வளவன்" ஆகையால், "எனக்கெளியன் எம்பெருமாள் இங்கு' என்று பரிஹரிக்கிறார். 37-வது பாசுரத்தில் மற்றொரு சங்கை பரிஹரிக்கிறார். தமக்குத்தாம் தேறி "ஆம், ஆறு அறிவுடையராவது அரிது, நெஞ்சே நாம் அவனை அன்பாலமைத்து வாழ்த்துவோம். ஆகையால் நாம் உய்யுமாறுடையோம்" என்கிறார். 55-வது பாசுரத்தில் "கடலில் கிடக்கும் நாகணையாரை நாம் ஏற்ற இயலாது. அவரோ நம்மிடம் வரவும் இயலாது. இப்படியிருக்க நீர்எப்படி அவரைக் காண்பது" என்று நெஞ்சு கேட்க "அறியாயோ, எப்பொழுதும் என் மனக் கவலையைத் தீர்க்கின்றார்"; இப்பேற்றால் அவர் வரவு எமக்குக் காணலாம் என்று

"மருங்கோதம் மோதும் மணிநாகணையார்
மருங்கே வரவரிய ரேனும்—ஒருங்கே
எமக்கவரைக் காணலாம் எப்பொழுதும் உள்ளார்
மனக்கவலை தீர்ப்பார் வரவு"

எனக்காரியம்கண்டு காரணம் இயம்புகிறார். 65 - வது பாசுரத்தில் நீக்கவொண்ணாத துயரம் கவலைகளை அடித்து ஒழிக்க நெஞ்சிற்கு ஒரு சூழ்ச்சி கற்பிக்கிறார்.

"தொல்மாலை கேசவனை நாராயணனை மாதவனைச்
சொல்மாலை எப்பொழுதும் சூட்டு"

இதுவே, "கலந்து நலியும் கடுந்துயரை" "மலங்க வடித்து மடிக்கும்," என்கிறார். தாம் சுமைதளையின்றி யாதொரு கலக்கமுமின்றி நிர்பரராய் நிற்பதை 70-பாசுரத்தில் கூறுகிறார்.

"அடர்பொன் முடியானை ஆயிரம் பேரானை
சுடர்கொள் சுடராழி யானை-இடர்கடியும்
மாதா பிதுவாக வைத்தேன் எனதுள்ளே
யாதாகில் யாதே இனி"

இந்த நிர்ப்பயத்தையும் யாதொரு சுமைதளையுமின்றியுள்ள நிர்பாரத்தையும் சொல்லித் தமக்குப் பகவான் வைகுண்டத்தைத் தருவான் சீர்த்திருத்துவதைப் பற்றி விஸ்மயிக்கிறார். 25-வது செய்யுள்

"ஆரானும் ஆதானும் செய்ய அகலிடத்தை
ஆராய்ந்து அது திருத்தலாவதே—சீரார்
மனத்தலைவன் துன்பத்தை மாற்றினேன் வானோ
ரினத்தலைவன் கண்ணனால் யான்"

என 8-ம் பாசுரத்தில் "அம்மா நின்பாதத்து" "அருகும்சுவடும் தெரிவு உணரோம்" பாவியோன் காண்பரிய பண்புடையீர், "நுண்புடையீர்" என்று விளித்து அவனைக் காணாது ஒழிந்தவாறு "இதென்ன ஆச்சரியம்; "பருகலாம் பண்புடையீராய் இருப்பதே ?" எனக்கு "அன்பே பெருகி மிக ஆசை பெருகுகின்றதே" "இது வென்" "பேசீர்" என்று தம்மருமைத் தெய்வத்தைக் கேட்கிறார். தம்பஹிர்(வெளி)இந்திரியமாகிய கண்ணால்காணாவிடினும் 28-வது பாசுரத்தில் அகக்கண்ணால் தாம் உணர்வதைப்பற்றி உகப்பாய்க் கூறுகிறார்.

"அன்றேநம் கண்காணும் ஆழியான் காருருவம்
இன்றேநாம் காணாது இருப்பதுவும்-என்றேனும்
கட்கண்ணால் காணாத அவ்வுருவை நெஞ்சென்றும்
உட்கண்ணால் காணும் உணர்ந்து"

தன் உன்னதமான பேற்றைப் பெற்றடைந்ததற்குக் காரணம் "வினை"யாகிற கர்மவாஸனை தம்மை விட்டு அகன்றதென்றும் "உள்ளம் தடிக்கும் வினைப் படலம் விள்ள" தன் மெய்ஞானக் கண் திறந்து விழித்ததென்றும் தம் பேறு சாச்வதமென்றும் 76-ம் பாசுரத்தில் கூறுகிறார்.

"உள்ளினும் உள்ளம் தடிக்கும் வினைப்படலம்
விள்ள விழித்து உன்னை மெய்யுற்றால்-உள்ள
உலகளவும் யானும் உளனாவன் என்கொலாம்
உலகளந்த மூர்த்தி உரை"

தாம் "சத்தை" அழியாப் பொருளானேனென்றுகக்கிறார். இவ்வுகப்பே மேல்கொண்டு செருக்குவாய்ந்து ஆழ்வார் உள்ளத்தை உற்சாகிப்பதால், அவனுக்குத் திருமலை க்ஷீராப்தி வைகுண்டம் திருப்பதிகள் உளவாயிருக்கத் தன்னுள்ளத்தகத்தில் நீங்காக் குடிகொண்டது தன் அன்புவாய்ந்த உள்ளம் மற்ற எல்லாவற்றினிலும் சீரியதாக அவன் கொள்ளலே காரணமென்று வியந்து 68-வது பாசுரத்தில் அகமலர்ந்து அதிசயிக்கிறார்.

"கல்லும் கனைகடலும் வைகுந்த வானமும்
புல்லென்று ஒழிந்தனகொல் ?-ஏபாவம்! வெல்ல
நெடியான் நிறம்கரியான் உள்புகுந்து நீங்கான்
அடியேனது உள்ளத் தகம்"

மேலும் உகப்பு மிதம்மிஞ்சித் தூண்டவே, தன் சுருதியை முடுக்கி, அவனையே, 'நீ பெரியவனா, நான் பெரியவனா' என்று வினவத் துணியவும் துணிந்துளார்.



"புவியும் இருவிசும்பும் நின்னகதத நீயென்
செவியின் வழிபுகுந்து என்னுள்ளாய்-அவிவின்றி
யான்பெரியன் நீபெரியை என்பதனை யாரறிவார்
ஊன்பருகும் நேமியாய் உள்ளு"

இந்தக் கிரந்தத்தில் வேதாந்த நுண்பொருள்கள் ஆங்காங்குக் கிடப்பினும் அவைகளை இங்கு எடுத்து விசேஷகுறிப்பாய் எழுத அவசியமில்லை. ஆனாலும் ஒரு தத்துவம்—

இவர்கொள்கையின் மூலாதாரமானதால் இதுவிடற்பாலதன்று. ஆண்டவன் தன் படைப்பில் கண்ட எல்லா வஸ்துக்களிலும் அனுப்பிரவேசித்தும் நடத்தியும் கடத்தியும், எல்லாச் சராசரத்திலும் அகப்பொருளாய் நின்றான் ஆனாலும், அவன் ஸாதரணமாய்ப் புருஷஸூக்தத்தில் சொல்லியபடி தானேதானாய் ஒரு கலப்பின்றியும் இருக்கும் இருப்பை 11-வது பாசுரத்தில்

"பாரும்நீ வானும்நீ காலும்நீ தீயும்நீ
நீரும் நீ—நீயாய் நின்ற நீ" என்று உரைக்கிறார்.

கடைசி பாசுரத்தில், தம்மால் ஆற்றித் திருத்திய தம் திருவுள்ளத்திற்குக் கற்பிக்கஆவசியகமில்லாதிருந்தாலும் நம்போலும் பக்தர்களுக்காகவே, தன் உள்ளத்திற்குப் பாடம் உரைப்பார்போல் "எப்போதும் திருமாலை ஏத்த முயலென்"என்று கற்பிக்கின்றார்.

இப்போதும் இன்றும் இனிச்சிறிது நின்றாலும்
எப்போதும் ஈதேசொல் லென்னஞ்சே—எப்போதும்
கைகழலா நேமியான் நம்மேல் வினைகடிவான்
மொய்கழலே ஏத்த முயல்.

நேமியை ஒருபொழுதும் விடான்; நம்மையும் விடான்—இக்குறிப்புகளெல்லாம் எவ்விதம் உன்னி ஆராய்ந்தாலும் எம் பொறிகளறிவால் விள்ளத்தக்கனவல்ல. வைணவரை ஆட்கொண்டதினால் அஸாதாரணமாய் "உடையவர்", அதாவது நம்மை ஆளாக உடையவர், என்கிற ஸ்ரீராமானுஜமுனி இக்கிரந்தத்திற்கு முன் சாற்றுக்கவியாய்க் கற்பித்த மந்திரத்தால் இதிலுள்ள நிதிகளை ஒருவாறு எடுத்துக் காட்டலானோம். அம்மந்திரம்-" குருகூரான் மாறனை உள்ளத்திலமைப்பதுவும் வாயார வந்தித்து வாழ்த்துவதும்". இப்பொருள் வாய்ந்த எம்பெருமானார் சாற்றுக்கவியை கேளீர்—!

"முந்துற்ற நெஞ்சே முயற்றி தரித்துரைத்து
வந்தித்து வாயார வாழ்த்துநீ—சந்த
முருகூரும் சோலைசூழ் மொய்ப்பூம் பொருநல்
குருகூரன் மாறன்பேர் கூறு"

நிதிகளைத் தேடிஎடுப்பதுபோல் இவ்வளவு ஆராய்ச்சியும்சிரமும் என்! தாம் போதிக்க வேண்டிய தத்துவங்களை ஒழுங்குபடுத்த ஆழ்வார் வல்லவரல்லரோ என்று ஒரு கேள்வி நடையாடக்கூடும். அது குச்சோத்தியமாகாது. ஆழ்வார் வல்லவரேனும் இப்பிரபந்தத்தில் முக்கியமாய் "நெஞ்சொடு புலத்தல்" முழுவதும் தொடர்ந்து நிற்கின்றது. நெஞ்சில் உதிக்கும் ஐயம் திரிபு மோகங்களைத் திருத்தலே ஆழ்வாருக்குப் பெருங்கடனாகவும் பொறுப்பாகவும் இப்பிரபந்தத்தில் ஏற்பட்டு விட்டது. இந்நிலையில் பிரஸக்தங்களை அனுசரித்துநிற்கும்சமயசந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டாமல் ஒழிய ஆழ்வாருக்கும் ஏலாமல் போயிற்று. இப் பிரபந்தத்தில் ஆழ்வார், இரண்டு வலிய காளைகளைப்பூட்டிய ரதத்திற்குச் சாரதிஸ்தானத்திலமைந்துள்ளார். ஒன்று வலத்தது, தன் கவிதைதான் உலகுக்குப் போதிக்கவேண்டிய அம்சங்கள்-மற்றொரு காளை இடத்தது, மோஹமும் ஐயமும் ஒருவாறு குடிக்கொண்ட நெஞ்சு. இடதுபக்க காளையை வழியினின்றும் நிரம்ப அதிக்கிரமிக்காமல் நெறியில் தானே அமைத்துவைத்து ரதத்தை நடத்தச் சாரதித்தொழில்பூண்டமையால் ஆழ்வாருக்குத்தான்கற்பிக்க எத்தனித்த நீதிகளைமாத்திரம் ஒழுங்குபடுத்தி அவைகளைக்கிரமமாய் ஒன்றின்பின் ஒன்றாய்த் தெறியக்கூறுமாறு வாய்க்கவில்லை. இவ்வலத்துளகாளை காவியரசத்திலும் அதிசயகல்பனையிலும் இறங்கிச்சிற்சில சமயங்களில் உற்சாகங்கொண்டு உலாவுகின்றதென்றால் அம்மஹான்தான் என்செய்வார்? ஒரு உதாஹரணம் இவ்விடத்தில் கூறுவோம், "குறளாய்த் திடீரென்று உற்பவித்து யாரொருவரிடத்திலும் ஜாதகர்மம்நாமகரணம் சௌலம் உபநயனம் முதலான சடங்குகளை அபேக்ஷிக்காமல் தானே குள்ளபிரம்மாசாரி வடிவத்தால் மஹாபலி சக்கரவர்த்தியும்கூட சௌந்தரியத்தில் ஈடுபட்டுத் தன் பூமியைத் தானம் கொடுக்கும்படி செய்ய ஏன் இத்தனைத் தூர்த்தரைகள் வாய்ந்த சூழ்ச்சியை அவலம்பித்தீர்" என்று பகவானைக் கேட்கிறார். அந்த ரசமுள்ள பாசுரம் 16-வது

சீரால் பிறந்து சிறப்பால் வளராது
பேர்வாமனா காக்கால் பேராளா-மார்பாரப்
புல்கிநீ யுண்டுமிழ்ந்த பூமிநீ ரேற்பரிதோ
சொல்லுநீ யாமறியச் சூழ்ந்து.

"நீரேற்பது" என்றால் "தானம் வாங்குதல்" என்று அர்த்தம். நீ வராக அவதாரத்தில் புல்கின பிராட்டியல்லவோ பூமிதேவி? நீயுகமுடிவில் அகத்துவிழுங்கிப் பிறகு சிர்ஷ்டிக்கும் பூமிஉனக்குஅசாதாரண பாத்தியமுள்ளதன்றோ, என்பது கேள்வி. உன் உரிமையை நீ ஏற்ப இத்தனைத் துன்பப்பாடு ஏன்? உன் ஆழ்ந்த கருத்தை யோசித்துச் சொல்.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.

வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

### 19. உலாவியற் படலம்.

புந்தியும் பொறியு மேந்தைபா லுந்தா.

உலாவரு மிராமனை யுவகையோ டடைந்த கலாமதி முகமுடைக் காரிகை நல்லார், அலாநெறி படர்ந்திலர்; அவசமே யெய்தி எலாம்வல இறைவனென் றுணர்ந்த சிந்தையால், அயிர்த்தனர், ஆசை கூர்ந்தனர் அவ்வியங் கொண்டனர்; அந்தவந்த

896வது பக்கத் தொடர்ச்சி.

நிலைகளுக்குரிய மொழிகளும் தொழிலும் நிகழ்த்தினர். ஒன்றினை வேறிரண்டு தனித்தனி நிகர்க்குமாயின், அவ்விரண்டுமே தம்முள் ஒன்றினையொன்று நிகர்க்கும் என்பது தர்க்கப்பிரமாண மாதலால், கடவுள்திறத்தில் மாந்தர் இயங்குவதுபோன்றே இராமன்திறத்தில் மாதர் இயங்கியதுபற்றி, இராமனே கடவுளென்று கம்பர், குறிப்புணர்த்தினு ரென்பது வரன்முறைக் கொள்கையாகும்.

"கண்ணனே இவன் கண்டிரும் பின்" என்றவள்போல் அநுமானப் பிரமாணத்தால் விவகரித்தவரும்; அவ்வியமும், தம்மைப்போல் பிறரும் இன்புற வேண்டுமெனும் நட்பும் எதிரெதிர் நடக்கும் நோக்கங்களேனும், இவ்விரண்டையும் ஆசை தனது உறுப்பாகப் பெற்றிருப்பதால், அவ்வாசையுற்றுள்ளவரில் 'அமலன்மேனி நோக்குறுவரை யெல்லாம் எரியெழ்ச் சீற்றத்தால் நோக்கியும், "நின்கருத்து மவ்வழி கண்டதுண்டோ" எனப்பரிவினொடு வினவியும் நின்றவர்கள் அவ்வாருகக் காட்சியால் அக்கடவுளை அனுபவிக்க ஆதரித்தவர் தம்மையுஞ் சிலர் இங்குக் காணலாம். ஒருத்தி,

மைத வழ்ந்த கருங்கணொர் வாணுதல்
செய்த வன்றனித் தேர்மிசைச் சேறல்விட்
டெய்த வந்தெதிர் நின்றமை தானிது
கைத வங்கொல் கனவுகொ லோவென்றாள்.

[மைதீட்டிய கரிய கண்களையும் ஒளிபொருந்திய நெற்றியையும் உடையவள், "என்னை இவ்விதம் தன்பால் அன்பு கொள்ளும்படி செய்த இவன், தன்னுடைய தேரில் போவதைவிட்டு, நெருங்கிவந்து என் கண்முன் நின்ற இது, அவனது மாயமோ, அல்லது, எனது கனவு தானோ]

என்று கலங்கினாள். இதற்குள் அவள், உருவெளித்தோற்றம் எய்தப்பெற்றனள் என்று எண்ணுவது மரபன்று. பிரிந்திருக்கும் காதலர்க்கு நேர்வது உருவெளித்தோற்ற மாதலால், கண்டிருந்த இராகவன் கண்மறையா முன்னமே உருவெளி அவட்குற்றதென்றுரைப்பதற் கில்லை. ஆதலின், இந்நங்கை இராமனைக் குறித்தே கூறுகின்றாளென் றுணர்தல்வேண்டும் கடவுள் சிலபோது தன் திருவுருவக் காட்சியைத் தனதடியார்தம் மனக்கண்களுக் களிக்கின்றார். அவ்வாறு அளிக்கப்பெற்றோர் அக்காட்சியி னருமையா லயிர்ப்பாராகிக் "கனவோ விது, மற்றோர் கைதவமோ!" வென மயங்குவ தியற்கை. கடவுட்காட்சி நேருங்கால் வேறுள பொருள்கள்யாவு மக்காட்சியுளொடுங்கி மறைவதால் இம்மருட்சி பின்னும் மிகுகின்றது. தேரிற்சென்ற இராகவன் இவளது கண்ணிற்கும் தனியாக வந்து எதிர்நிற்பதுபோன்றே தோன்றினன்.

மனம் மருண்டதேனும் தெளிந்தகாட்சி பெற்றவள் அவள் மற்றுக் கலங்கிய காட்சியள் வேறொருத்தி,

நனிவ ருந்தி நலங்குடி போய்விடப்
பனிவ ருங்கணொர் பாசிழை யல்குலாள்
முனிவ ருங்குல மன்னரு மொய்ப்பறத்
தனிவ ருங்கொல் கனவின் றலையென்றாள்.

[நீர்த்துளி அரும்புகின்ற கண்களையும், பசும் பொன்னாலாகிய ஆபரணங்கள் சூழ்ந்த அல்குலையும் உடையவள், தனது அழகெலாம் நீங்கிவிடுமளவு மிகவும் வருந்தினவளாய், "முனிவரும் சிறந்த மன்னரும் சூழ்ந்திராமல் இப்பெருமகன் என் கனவிலேனும் தனியேவந்து எய்துவானோ" என்றான்.]

முன்னவளைப்போ லிவள் இராமன் தனியேவந்து தன்முன் நின்றானாகக் கண்டாளல்லள். மற்றவர் இருந்தும் இல்லார்போல் நீந்தகலுமளவு இவள் மனம் ஒருமுகப் படவில்லை. ஆதலின் இவள், 'கனவிலேனும் தனியே வருவானோ' வென விழைந்துரைத்தாள். கடவுள்பால் இவ்வகை நினைவுகொண்டார் சிலர் இலராகார். கடவுளென்னும் காட்சி இச்சிலருக்கு ஒவ்வோர் செவ்வியில் மனத்துள் தோன்றலாகின்றது. எனினும், அக்காட்சியுடன் பிறபொருள்களும் சேரக் கலந்து தோன்றலால், கடவுளைத் தனியேபெற்று அனுபவிக்கவேண்டுமென்ற வேட்கை இவ்வகை இடையூறுறுதற் காற்றாராகி, யோகம் முதலிய நிலைகளில் அத்தனிவரும் பேறு பெறுவான் முயன்றிடுகின்றனர். கனவிலேனும் இராமனைத் தனியேவரக் காண வேண்டுமெனும் பெட்பினளாய இந்நங்கை அன்ன தன்மையள்.

இவ்வண்ணம் பற்பல பெற்றியில் நின்ற மாதரனைவரும், இராமனைத் தாம் பெறாது பேதுறுகின்ற காலையில், அப்பேறுபெற்றுள சீதையை நினைத்து, "இக்கோமகன்தன் மகிழ்ச்சிக்குரியளாய சீதையோ நாமல்லோம், இவன் மகிழும்படி அவள் செய்துள தவமும் நாமெய்தியதில்லை; எவ்வளவு அவாவினுந்தான் நாம் மற்று எங்ஙனம் உய்வோம்" என நைந்திருப்பர். அதனைக் குறிப்பவராகிக் கம்பர்,

ஆம்ப லொத்தமு தூறுசெவ் வாய்ச்சியர்
தாம்ப தைத்துயி ருட்டடு மாறுவார்
தேம்பு சிற்றிடைச் சீதையைப் போற்சிறி
தேம்பல் பெற்றில ரெங்ஙன முய்வரே.

[செவ்வாம்பலைப்போல், தேனூறிய மொழிகள் ஊறுவதற்குரிய சிவந்த வாயுடையமகளிர், உயிர்பதைத்து உள்ளம்தடுமாறினர்—வருந்துகின்ற சிறிய இடையை உடைய சீதையைப்போல் இராமனால் சிறிதேனும் உகக்கப் பெறாதவர் எவ்வாறு உய்ந்திடுவார்.]

என்று இயம்புவது,

வாளான் மகவரிந் தூட்டவல் லேனல்லன்
மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன்
தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்ல
னினிச்சென்



றாளவ தெப்படி யோதிருக் காளத்தி
யப்பனுக்கே

எனப் பட்டினத்தடிகள் ஏங்குவதை ஒருவாறு நினைப்பூட்டலாம்.

இன்னபடியெலாம் தன்புலமையின் நலத்தினால் நம் கலைஞர்பெருமான், காமத்தால் நிகழ்த்தும் செய்கைகளைச் செப்புவதுபோல் மிதிலைமாதர் இராமனைப் பரமனென்ற பான்மையிலேயே பாராட்டின அருமையைக் குறிப்பிலுணர்த்தியது மல்லாமல், வெளிப்படையாகவும்,

தோள்கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
தடக்கைகண் டாரு மஃதே
வாள்கண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கண்ட சமயத் தன்னா
னுருவுகண் டாரை யொத்தார்.

[இராமனது தோளைக் கண்டவர் தோளையே பார்த்திருந்தனர். கழலணிந்த தாமரைபோன்ற பாதங்களைப் பார்த்தவர் பாதங்களையே பார்த்துக்கொண் டிருந்தனர். பெரிய கைகளைத் பார்த்தவரும் அங்ஙனம் அவன் கைகளன்றிப் பிறிதொன்றும் பார்த்திலர். இவ்வாறு, வாள்போன்ற தம் கண்களால் காண முயன்றவர், அவனது ஒவ்வோர் உறுப்பை அல்லாது, அவன் வடிவு அடங்கலும் ஒருங்கே பார்த்தவர் ஒருவருமில்லை. ஆதலின் இம்மாதர், மாறுபடும் மதங்களின் சித்தாந்தங்களால் அவனது இலக்கணத்தைத் தேர்ந்து கண்டவர்களையே ஒத்தார்]

எனத் தெள்ளிதின் தனதியற்கையாய நுண்ணறிவு விளங்க நவின்றனர்.

இது, அங்கிருந்த எல்லா மாதர்களுக்கும் பொதுவுற இயையும் பெற்றியதன்று; வாள்கொண்ட கண்களால் காண்பதில் நிலைத்தவர் செய்தியேயாகும். கண்ணால் இராமனது வடிவை முடியக்காணாமையே, சமயத்தால் அவனது உருவத்தை முடியக் கருதஇயலாமையை ஒக்கும். அங்கிருந்த மாதர்களிற் சிலர் தம் சிந்தையால் இராமனை ஏற்றுக்கொண்டிடற் கமைந்தாராதலின் அன்னவர், தாளும் தோளும் தடக்கையுந் தனித்தனிக் காண்பா ராகாது,

மைக்கருங் கூந்தற் செவ்வாய்
வாணுத லொருத்தி யுள்ளம்
நெக்கன ளுருகு கின்றாள்
நெஞ்சிடை வஞ்சன் வந்து
புக்கனன் போகா வண்ணம்
கண்ணெனும் புலங்கெள் வாயில்
சிக்கென வடைத்தேன் றோழி
சேருது மமளி யென்றாள்.

[மைபோன்ற கரிய கூந்தலையும், சிவந்த வாயையும், ஒளிபொருந்திய நெற்றியையும் உடைய ஒருத்தி, மனம் நெகிழ்ந்து உருகுவாளாகி, "தோழி, என்னுடைய நெஞ்சத்திடையில் இந்தக் கள்வன் வந்து புகுந்தனன். இவன் மீண்டு போகாதபடி, எனது கண்ணெனும் பொறியின் கதவை இறுக அடைத்துவிட்டேன்; இனி அவனோடு படுக்கையைச் சேர்வோம்"]

என்றாள்போல, உருகிய உள்ளத்தில் அவனது நிரம்பிய உருவத்தைப் பதிவுசெய்து கொண்டவராவர். ஊழ்கொண்ட சமயத்தால் அவனுருவு கண்டவரை யொத்தவர் இன்னவரல்லர். 'வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக்கண்டார்' என்றியம்புமாற்றால் கம்பர், கண்ணால் அவனை முடியக் காண இயலாமையையே காட்டினார்.

காண இயலாமையோடு இன்னொன்றும், "கண்ணெனும் புலன் கொள்வாயில் சிக்கென" அடைத்த இம்மாதின் புணர்ப்பினால் தெரிகின்றது. கடவுள் தானாகவந்து நம் சிந்தையில் குடிகொள்ள முயல்கின்றார். அம்முயற்சியின் உணர்ச்சியை நாம் சிறிது சிறிது எய்தியவுடன், 'ஆராய்ச்சி' என்ற பேரைச் சொல்லிக்கொண்டு, புலன்களால் சோதிக்கப்புகுகின்றோம். இச்சோதனையின் பயனாய்க் கடவுளுணர்ச்சி பெருகுவ தில்லை; தானாக எய்திய சிறிதுணர்ச்சியும் போகத்தான் போய்விடுகின்றது. ஆகையால் இவள், எய்திய கடவுள் போகாவண்ணம் 'கண்ணை'ச்சிக்கென அடைத்து விட்டாள். கடவுள்நினைவு அமைதியுற்றதோர் நிலையில் அனுபவிப்பதற் குரியதேயன்றி அல்லலுற்று ஆராய்தற் கேற்றதன்று. ஆதலால் இம்மாது, சிக்கெனப் புலன்கொள் வாயிலை அடைத்தவுடன், "சேருதும் அமளி" என்றாள்.

மனிதர் விடயங்களைத் தெரிந்துகொள்வதற்கு ஏற்றனவாய் அமைந்துள உறுப்புக்கள், புலன் சிந்தை புத்தி என்பன மூன்று. இவைகளின் முதலும் கடையும், வேறுவேறு பிரித்து விடயங்களை நோக்கும் தன்மையன. எல்லாவற்றையும் தொகுத்து நோக்கும் திறம் சிந்தைக்கே யுளது கடவுள் பிரிக்கப்படா ஒருமையாதலால் (indivisible unit) புலனுக்கும் புத்திக்கும் அவன் ஒருநாளும் எட்டமாட்டான். அதலால் புலனாலும் புத்தியாலும் அவனையெய்தப்புகுவார் அவனது ஒவ்வோர் பாகத்தையே பார்க்கக்கூடியவ ராகின்றனர். இராமனை நோக்கிய மாதரை 'வாள்கொண்ட கண்ணார்' என்றது, வாள்போல் போழ்ந்து பிரிக்கும் தன்மையுடைய கண்களையுடையவர், எங்ஙனம் அவனை முடியக் காணஇயலுமென்ற ஐயத்தை வற்புறுத்துதற்கே யாம்.

இவ்வாறு, புலனால் முடியக் காண இயலாமையைப் புத்தியின்சூழ்ச்சியாய சமயக்கோட்பாடுகளால் பரமனைக் காண இயலாமைக்கு ஒப்புக்கூறினாரேனும், புலனாற்கண்டு ஆராதிப்பதிலும் சமயத்தால் ஆராய்வது பின்னும் சிறுமைக்கிடமான தென்பதையும் கம்பர் மறந்திலர். தோள்கண்டவர் தோளே இராமனென்றும் தாள்கண்டவர் அத்தாள்களே இராமனென்றும் நின்றுவிட்டது பேதைமையின்பாற் படலாம். மற்றுத் தத்தம் சமயநெறியால் சாதிக்கப் புகுவார்மாட்டுப் பேதைமையொடு பகையுஞ் சேர்ந்திருக்கின்றது. ஆதலால் சிந்தையால் எந்தையை ஏற்கும் வகையற்றார் புலனோடு நிற்றலே பெருமையுடைத்து.

ஏனெனில், இன்னொருத்தி கண் கொண்டே பார்த்தவளும், கண்ணிற்குரிய பிரிப்புத்தொழிலால் இராமனைச் சூழ்ந்திருந்தோர்தம்மினின்று தனிப்பட நோக்கலாயினாள் என்பதைக் கம்பர்,

விற்றங்கு புருவ நெற்றி
வெயர்வரப் பசலை விம்மச்
சுற்றெங்கு மெறிப்ப வுள்ளஞ்
சோரவோர் தோகை நின்றாள்
கொற்றஞ்செய் கொலைவே லென்னக்
கூற்றெனக் கொடிய கண்ணாள்

மற்றொன்றுங் காண்கி லாதாள்
தமியனே வள்ள லென்றாள்.

[வெற்றிபெறக் கொல்கின்ற வேலாயுதம் போலவும் யமன்போலவும் கொடிய கண்களையுடையவளாகிய ஓர் மயில் போன்றவள், வில் போன்ற புருவத்திலும் நெற்றியிலும் வியர்வை அரும்பவும், உடல் முழுதும் பசலை மிகுந்து வீசவும், மனந்தளர்ந்து நின்றவளாய், வேறொன்றுங்காணாது, "இராமன் தனியாகத்தான் இருக்கின்றானே" என்றாள்]

எனக் காட்டலாகின்றனர். தமியனாயிருப்பின் தான் சென்றணைத்துக்கொள்ளலாம் என்னும் ஆசையால் இவ்வாறிவள் அயிர்த்தாளாயினும், இவள்நிலை கடவுள்காட்சி கூடப்பெறவேோர்க்கு முரியதே.

இவ்வண்ணம் எப்பொருட்கும் இறைவனை இராமன் தன்னரு மிலக்கணமெலாந் தெரியக்காட்டி அந்நன்னாள் மிதிலைமாநகரிவாய் உலாப்போந்து மன்னன் மாளிகை மண்டப மெய்தினன். தாருவனத்துறை தவசியர்தம் பன்னியர் நிறைக் களவுள தென்பதைக் கயிலைவாழண்ணல் பலிகொள்ளுங் கோலத்தி லளந்து காட்ட, பாற்கடற் பரமன் தனதழகிற் களவிலதென்பதை உலாவரு கோலத்தில் ஜனகநன்னகர் வீதியில் அளந்துகாட்டுஞ் செவ்வி இப்படலத்தின்கண் நேர்ந்தது. "ஐயன் பொற்பிற் களவில்லை யாதலால்" இங்ஙனம் நிகழ்ந்ததெனக் கம்பர் ஓர் செய்யுளிற் குறித்துளார். அளவிலா அழகே கடவுள்—காமலையத் தளர்ந்து எய்த்த கைக்கரியை விராவி அளித்தருள் மெய்ப்பொருளும் அளத்தலாகா அழகுடைய இவ்விராமனே!

# மானத சாத்திரம்

## PSYCHOLOGY

### நரம்புகள்.

புகுவாய் நரம்புகள், இயக்குவாய் நரம்புகள் என்ற இரண்டேனும் உயிர்களிடத்தே இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றனவா? அல்லாக்கால் இவற்றில் எது இன்றியமையாததாக விளங்குகிறது? இவ்வாறு ஆராய்ந்தவர்கள் இயங்குவாய் நரம்பே (motor nerves) கீழ்நிலையில் காணப்படும் உயிர்களிடத்தே இன்றியமையாததாக இருப்பதனைக் கண்டறிந்தனர்.

889வது பக்கத் தொடர்ச்சி.

கடற்பஞ்சு என்ற உயிரானது விரலைப்போன்றிருக்கும். இதுவும் கடலடியில் ஒற்றிக்கிடக்கும் ஓர் உயிர்வகையாம். இதன் வெளிப்பரப்பு முழுவதும் சில்லி சில்லியாகக் காணக்கிடக்கும். உடலினுள்ளே ஓடும் வாய்க்கால்களினிடத்தே போய் இச்சில்லிகள் முடிகின்றன. இவ்வாய்க்கால்கள் மயிரிமையோடு கூடியன. இவ்விமைகள் அசைவதனால், கடல்நீரானது, அவ்வாய்க்கால்கள் வழியாக உட்புறத்திற்கு அலைத்துக் கொண்டுபோகப்படுகிறது. ஒரு புறம் கடலடியில் ஒற்றிக்கிடப்ப மற்றொருபுறம் ஒற்றாமல் கிடக்கும் என்றோமன்றோ? அவ்வாறு ஒற்றாது கிடக்கும் மேற்புறத்தில் ஒரு சிறு புழையுண்டு. உள்ளே அலைத்துக்கொண்டு போகப்பட்ட நீரானது இப்புழை வழியாக வெளியேறுகிறது. இவ்வாறு கடல் நீரானது உள்ளே புகுந்து வெளியே ஓடும்போது இவ்வுயிர்வகையானது தன்னுணவைப் பிழிந்தெடுத்துக் கொள்கிறது. இச்சில்லிகளைச் சுற்றிலும் தசைநார்கள் காணக்கிடக்கின்றன. இச்சில்லிகளின் வாயிலில் உயிர்ப்பசைத்தோல் (Protoplasmic membrane) உண்டு; அத்தோல் விரிந்தால் புழைவாய் மூடிக்கொள்ளும், சுருங்கினால் திறந்துகொள்ளும். இவ்வுயிர்ப்பசைத்தோல்கள் மூடித் திறப்பதினாலும் அந்தத் தசைநார்கள் அவ்வாறு அவற்றை இயக்குவதினாலும் இப்புழைகள் மூடுவதும் திறப்பதும் செய்து, தண்ணீரை உள்ளே பாய்ச்சி வெளியே இறைக்கின்றன.

இதைத்தவிர இவ்வுயிர்வகையினிடத்தே வேறொரு செயலும், பொதுவாகக் காணப்படவில்லை எனலாம்.

ஒரு புழையைத் தடுத்து மூடச் செய்யவேண்டுமானால், அந்தப்புழையின் குறித்த இடத்தைத் தொடுதல் வேண்டும். வேறு எவ்விடத்தைத் தொட்டாலும், அந்தப்புழை மூடிக்கொள்ளாது. அவ்விடத்திற்கு அடுத்த இடத்தைத் தொட்டாலும் மூடிக்கொள்ளாது. நம்முடலில் எவ்விடத்தில் அடித்தாலும் அதைத் தடுக்கச் செல்கின்றோம் அன்றோ? ஆனால் கடற்பஞ்சிலோ இந்த உயர்நிலை காணப்படவில்லை. ஏன் என்று ஆராயும்போது, அதனிடத்தில் நரம்பமைப்பே இல்லை என்பது வெளியாகிறது. புழைவாயிலிருக்கும் தசைநாரை நேரே தாக்கினால்தான் அந்தத் தசைநாரானது சுருங்குவதும் விரிவதும் செய்து புழையை மூடித் திறக்கிறது. தசைநார்களே இயங்குவாயின் முடிவு எனக் கூறினோம். தசைநார்களுக்கு வேறாகப் புகுவாய் எனத் தனிநின்று வெளியுலகத் தாக்கலை யறிவன இவ்வுயிர்வகையில் ஒன்றும் இல்லை. நம்முடைய பின்கையில் உள்ள தசைநாரை இரண்டு வகையாக இயங்கச் செய்யலாகும். புகுவாய் வழியாக இயக்குவது ஒன்றாகும். நேரே தசைநார் வழியாக இயக்குவது இரண்டாகும். நெருப்பருகே விரல் சென்றவுடன் சூடறிந்த அப் புகுவாய்வழியாக உணர்ச்சிபெற்றுப் பின்னர் நடுவிட வமைப்பினால் இயக்கமுற்று அத்தசைநாரானது கையை மடக்குகிறது. இது புகுவாய் வழியாக இயங்கும் இயக்கம். இப்பின்கைத்தசைநார் (muscles) மேல் "பளா" என அடித்தால் அப்போது அத்தசைநார் நேரே இயக்குமுற்றுக் கையை மடக்குகிறது. இங்குப் புகுவாயும் பொருத்துவாயும் வேலை யொன்றும் செய்வதில்லை. இவ்வாறு பின்கைத் தசைநாரை நேரே அடிப்பது போலக் கடற்பஞ்சுகளி லுள்ள தசைநாரையும் நேரே தாக்கினால்தான் அவை இயங்கும். வேறுவகையில் இயங்குவதில்லை. எனவே கடற்பஞ்சினிடத்தே புகுவாயும் பொருத்துவாயும் இல்லை என்பதாயிற்று; இயங்குவாயே இன்றியமையாதது என்பதும் தெளிவாயிற்று.



முதுகெலும்புடைய உயிர் வகைகளை முதுகெலும்புடையனவெனலாம் (Vertibrates). இம்முதுகெலும்புடையவற்றினிடத்தே பொருத்துவாயாம் நடுவிட நரம்பமைப்பு நன்கு விளங்குகின்றது. பொதுவாகக் கூறுமிடத்து இப்பொருத்துவாய், மூளையும் முதுகுநரம்புமே யாம். முதுகு நரம்போ, இவ்வுயிர் வகைகளினிடத்தே ஒரே வகையாகத்தான் காணக் கிடக்கிறது. ஆனால் மூளையோ, பலவகையான உயர் நிலையை அடைந்துகொண்டே போகக்காணலாம். மூளையை, முன் மூளை, நடு மூளை, பின் மூளை எனப் பிரித்து ஆராய்வர். பின் மூளையில் (Hind brain) பிடரி மூளையும் (Medulla oblongata) பின் தலை மூளையும் (Cerebellum) உள்ளன. உயர்நிலையடைந்த உயிர்வகைகளிடனிடத்தே, இம்மூளைகளில் முன்தலை மூளையும் (Cerebrum) பின்தலை மூளையும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன. மீனிலிருந்து மக்கள் வரையில் ஆராய்ந்துவந்தால் முன்மூளையானது, அளவில் பெருத்தும் அமைப்பில் சிக்கலாகியும் வளர்ந்துகொண்டே போவதைக்காணலாம். கீழ்நிலையில் உள்ள உயிர்வகைகளினிடத்தே இந்த முன்தலை மூளை (Cerebrum) மூக்குணர்ச்சியைப்பொறுத்ததாக நிற்கிறது. ஆனால் பாலுண்பன (Mammals) எனும் உயிர்வகையைச் சேர்ந்தவற்றை ஆராயும்போது, மூக்குணர்ச்சி ஒன்றேயன்றி எல்லாப் புலனுணர்ச்சிகளும் வரித்தசைநார் இயக்கங்களும் (Voluntary musles) இம் முன்தலைமூளையைப் பொருத்தனவாக இருக்கின்றன.

மக்கள் ஒவ்வொருவரும் முட்டைபோன்ற கருவுளியின்நின்றே (cell) வளர்கின்றனர். முட்டையில் நடுநின்ற பொன்நிறக் கரு ஒன்று உண்டு. அஃதே உண்மைக்கருவாகும். அதற்கடுத்திருக்கும்வெண்ணிறக்கரு மேற்கூறிய கருவிற்குத் தீனியாக அமைந்ததேயன்றி உண்மையிற் கருவன்று. இவ்விரண்டிற்கு மேலே பசைத்தோல் ஒன்று நுண்ணிதாகக் காணப்படுகிறது. மக்கள் தோன்றுவதும் முட்டைபோன்ற கருவுளியின்நின்றேதான் எனக் கண்டோம். இக்கருவுளியின் குறுக்களவு ஒரு வீசம் அங்குலத்திற்கும் குறைந்திருக்கும். இக்கருவுளி ஒன்றிரண்டாகப் பிரியும்; பிரிந்த ஒவ்வொன்றும் மறுபடி மறுபடி ஒன்றிரண்டாகப் பிரிந்துகொண்டேயிருக்கும். இவ்வாறு பல்கி வளர்ந்தவையே நமது உடலாக அமைகின்றன. இவ்வாறு ஒன்றிலிருந்து பலவாக வளர்ந்துகொண்டுபோகையில் இக்கருவுளிகளிலேவேறுபாடுகள்பலதோன்றுகின்றன. நரம்பு, தசைநார் முதலிய பிரிவுகள் ஏற்படுவது இதனாலேயே என்றறிக. எனவே இக்கருவுளிகள் பல நரம்புக்கருவுளிகளாகக் காணப்படுகின்றன என்பதாயிற்று. நரம்புக் கருவுளிகளை நரப்பம் (Nervenes) என்ற புதுப்பெயர்கொண் டழைப்போம். மக்களது முன்தலை மூளையில் இந்நரப்பங்கள் படைபடையாக முறையே கிடக்கின்றன. ஆதலின் ஏறக்குறைய இத்துணைநரப்பங்கள்தான் இருக்கின்றன என்று ஒரு குறிப்பாகச் சொல்லுதல்கூடும். ஏறக்குறைய 9,200,000,000 நரப்பங்கள் இருக்கின்றனஎன ஆராய்ச்சிவாணர் நம்புகின்றனர். இத்துணையும் கட்டைவிரல் நுனியவ்வளவு அகலமும் நீளமும் உயரமும் உள்ள சிறு இடத்தில் அடங்கிக் கிடக்கின்றன. அவற்றை நிறுத்தாலோ 13 நெல்லுமணி யவ்வளவே இருக்கின்றன. ஒரு கருவுளி, இத்துணையாகப் பல்கி வளர்ந்ததென்றால் இவ்வியப்பினைப் பற்றி என் என்பது? குழந்தைபிறந்தவுடனேயே, இம்மூளை வளர்ச்சிநின்று விடுகின்றது. முதலில் பல்கிவளரத் தொடங்கியது எதனாலே என்பதையும், பின்னர், வளராது நின்றுவிடுவது எதனாலே என்பதையும் இதுவரையும் அறிந்தார் ஒருவரும் இல்லை. 13 நெல்லுமணி யுள்ளதாய்க் கட்டைவிரல் நுனியவ்வளவு அகல நீள வுயர முள்ள இடத்தில் அடங்கிக்கிடக்கும் இந்த முன்தலை மூளை (Cerebrum)யன்றோ,வள்ளுவரைவள்ளுவராக்கியது; கம்பனைப் பெரும்பாவாணனாக்கியது; சங்கரரை மெய்யுணர்வு கைவரப்பெற்ற மேலோராக்கியது. இம்மூளை சிறிது கெடுமானால் பித்தன்றோ பிடித்தலையவேண்டும். இவ்வுயிர்ப்பசை (Protoplasm) துளியிலன்றோ நம் முயிர்வாழ்க்கை அடங்கிக்கிடக்கின்றது. என்னே வியப்பு! என்னே வியப்பு!

ஆனால் நரம்புகளில் சில பெரியவைகளாக இருக்கின்றன. ஒருநரப்பம் தலையிலிருந்து முதுகின் முடிவு வரை ஓடுகிறது. மற்றொன்று முதுகு நரம்பிலிருந்து கால் பெருவிரல் நுனிவரை ஓடுகின்றது. இவற்றில் ஒருநூறாயிரம் ஒன்று சேர்ந்தால் ஒரு நரம்பாகும்.

இந்த நரப்பத்தில் கருவறை (Cell body) கருவோடு (nucleus) கிடக்கின்றது. அதிலிருந்து சிறு கிளைகள்ஓடுகின்றன. இந்நரப்பக்கிளைகள்பல(dendrites) ஒருபுறமோட, நரப்பவிழுது (axos) ஒன்று மற்றொருபுரம் ஓடுகின்றது. தசை நார்களிடத்தே கிளர்ச்சியைக் கொண்டுசெல்லும் தசைநார் நரப்பங்கள் இவ்வகையாக அமைந்து கிடக்கின்றன. தசைநார் நரப்பத்தின் கிளைகள் அதன் முடிவில்தான் பிரிகின்றன. அந்த நரப்பம் எந்தத் தசைநார்களை அடக்கியாள்கிறதோ அந்தத் தசைநார்களிடத்தே அந்த நரப்பம் அவ்வாறு பிரிகிறது. ஒரு நரப்பம் சில இடத்தே பன்னிரண்டு தசைநார்களை இயக்கும்; சில இடத்தே ஐம்பது தசைநார்களையும் (Motor fibres) இயக்கிவைக்கும். இது அவ்வவ்விடத்துத் தசைநாரைப் பொறுத்திருக்கிறது.

தசைநார் நரப்பம் இவ்வாறாக, புலனுணர் நரப்பங்களோ (Sensary neurones) மேல் நோக்காகப் பார்க்கும்போது வேறு வகையாகக் காணப்படுகின்றன. இந்த நரப்பத்திலும் கருவறை இருக்கின்றது. ஆனால் மேலே கண்டபடி நரப்பக் கிளைகள் பலவும் நரப்பவிழுது ஒன்றும் இங்கு இருக்கக் காணோம். ஆனால் கருவறையிலிருந்து இரண்டு நரப்பவிழுதுகள் இருவேறு புறமாகப் போகக் காண்கின்றோம். ஒன்று புகுவாயோடு சேர்ந்திருக்கிறது. மற்றொரு நரப்பவிழுது பல கிளைகளை விடுகின்றது. மேலே நாம் நரப்பக்கிளைகள் கண்ட இடத்தில் புகுவாயோடு சேரும் விழுதே இந்நரப்பங்களில் காணப்படுவதால் முன் சொல்லிய இயக்குவாய் நரப்பம் அல்லது தசைநார் நரப்பங்களுக்கும், இந்தப் புலனுணர் நரப்பம்அல்லது புகுவாய் நரப்பங்களுக்கும் இயற்கையமைப்பில் வேற்றுமையில்லை.

மற்றொரு வகையான நரப்பங்களும் உடம்பில் காணப்படுகின்றன. இவற்றினிடத்தும், இயக்க நரப்பங்களில் காணப்படுவதுபோலக் கருவறையும், நரப்

பக்கிளைகளும் (dendrites) காணக்கிடக்கின்றன. ஆனால், நீண்டநரப்ப விழுதிருக்கவேண்டிய இடத்தே கிளைகளோடுகூடிய குறுகிய நரப்பத்திற்கும், புலனுணர் நரப்பத்திற்கும் இடையே இத்தகைய நரப்பங்கள் காணப்படுகின்றன. இணைக்கு நரப்பங்கள் (association neurones) என இவைகள் பெயர் பெறுகின்றன. ஆனால் எல்லா இணைக்கு நரப்பங்களும் இந்த அமைப்போடு விளங்குகின்றன என்பதில்லை. அவற்றின் பல இயக்கு நரப்பங்களின் அமைப்போடேயே காணப்படுகின்றன. [நரம்பமைப்பு முழுதும் இம் மூன்று வகை நரப்பங்களால் ஆகியதே யாம். புலனுணர் நரப்பங்கள் புகுவாயிலிருந்து பொருத்துவாய்க்குக் கிளர்ச்சியைக் கொண்டு செல்கின்றன. இயக்கு நரப்பங்களோ பொருத்துவாயாம் நடுவிடவமைப்பிலிருந்து தசைநார்களிடம் கொண்டு செல்கின்றன.]

ஒவ்வொரு நரப்பமும் தூண்டப்பட்டு மற்றொன்றைத் தூண்டுகிறது. ஈதே அதன் செயல். நரப்பமானது ஒளி ஒலி முதலிய வெளிப்பொருள்களால் தூண்டப்படலாம். இத்தகைய நரப்பங்களுக்கே புகுவாய் என்று பெயர். இவ்வாறு நேரே வெளிப்பொருளால் தூண்டப்படாமல் மற்றொரு நரப்பத்தால் தூண்டப்படுவதும் உண்டு. புகுவாய் நரப்பம் வெளிப்பொருளால் தூண்டப்படுகிறது; ஆனால் அந் நரப்பமே அதற்கடுத்ததைத் தூண்டுகிறது. இவ்வாறு தொடர்ச்சியாகச் செல்கிறது.

தூண்டப்படுதல் இவ்வாறாகத் தூண்டுதலும் இது போலவே நேரே ஒரு தசைநாரையும், ஊற்றுத் தசை யுருளையையும்(Glands) தூண்டலாம். அல்லது மற்றொரு நரப்பத்தைத் தூண்டலாம்; இவ்வாறு ஒன்றை ஒன்று தூண்ட முடிவில் தசைநாரிலோ அல்லது ஊற்றுத்தசை யுருளையிலோ முடியும். தசைநார் ஊற்றுத்தசை யுருளை என்பவையே இயக்குவாயாகும். இவற்றின் கிளர்ச்சியே புகுவாய் வழியாக நுழைந்து தாக்கலின் முடிவாகும். தசைநார்கள் சுருங்குவதாலோ ஊற்றுத்தசை யுருளை உடனீர் சுரப்பதாலோ உடல் முழுதும் வெளிப்பொருள் வழியாகத்தாக்கிய இயற்கைப்பரப்போடு பொருத்தமுறுகின்றது.

## சாஹ்தியின் கருத்துகள் சில

வாழ்க்கையின் சௌகரியத்திற்குரிய சாதனமாய்ப் பொருட்செல்வம் அமைந்துளது பொருள்சேமிப்பதற்காகவென்று வாழ்க்கை அமையவில்லை. அறிஞர் ஒருவரை நான்சந்திக்க நேர்ந்தகாலை, 'அதிர்ஷ்டசாலி என்பவன் யாவன், அதிர்ஷ்டமில்லாதவன் யாவன்?' என்று கேட்டேன். அவர் சொன்னார், "தன்னிடமுள்ளவைகளைக் கேட்டவர்க் கீந்தவனும், செலவு செய்தவனும் அதிர்ஷ்டமுள்ளவன். சேமித்த பொருளைச் செலவு செய்யாது வைத்துவிட்டு இறந்தவன் துரதிர்ஷ்டக்காரன்".

* * *

அரசாங்கம் பெறும் சிறப்பெல்லாம் அதனிடமுள்ள அறிஞர்களால்; மதம் பெறும் பெருமையெல்லாம் சிறந்த பக்தர்களால். ஆகவே அரசர்களுக்கு இன்றியமையாதது அறிவுடை நல்லோரின் கூட்டுறவு; நல்லோருக்கு அரசர்களுடைய கூட்டுறவு தேவையில்லை. ஏ! அரசனே, எனது புத்திமதியைக் கேட்பாயானால், நான் சொல்வதற் கொன்றுண்டு. உனது காரியங்கள் எல்லாவற்றையும், கற்றறிந்தவர்களிடம் ஒப்படைத்துவிடு. ராஜகாரியங்கள், கற்றவனது வேலையன்றாயினும் அதற்கு அவனே தகுந்தவன்.

* * *

ஒரு ராஜாங்கத்திற்கும் மதஸ்தாபனத்திற்கும் விரோதிகள் இருவர். கருணையில்லாத அரசனும், கல்வி அறிவில்லாச் சாதுவும்(Holy man) ஆவர். கடவுளது கருத்திற்குக் கீழ்படியா எந்த அரசனும் ராஜாங்க மேற்பார்வையைக் கைக்கொள்ளவேண்டா.

* * *

கல்விப்பயிற்சி பெற்றவன் யாராயிருக்கட்டும், தான் பெற்றகல்வியைப் பயனுளவாறு உபயோகப் படுத்தாது போவனாயின், நிலத்தை நன்றாக உழுது விட்டு விதைபிடாததை ஒக்கும், அவன் செயல்.

* * *

கஸ்தூரி தனது வாசனையால் தன்னை அறிவித்துக் கொள்கின்றது. செயற்கை வாசனையின் துணை அதற்கு வேண்டியதில்லை. ஏதாவது ஒருகலையில் தேர்ச்சி பெற்றவனது திறமையே அவனை வெளியாக்கிவிடும். தனது கலைப்பயிற்சியைப் பிறருக்கு அவன் சொல்ல வேண்டுவதில்லை.

* * *

யாசிப்பதும் சேர்ப்பதுமாய் இருக்கும் பக்தனினும், தன்னிடம் இருப்பனவற்றைக் கொடுத்துச் செலவுசெய்துவிடும் பாவியே சிறந்தவன்.

* * *

ஒரு முகமதியப் பெரியாரை, அவர் சிறந்த அறிவு படைத்தது எப்படி என்று கேட்டதற்கு அவர் கூறிய விடையாவது:—எனக்குத் தெரியாத விஷயங்களைப் பற்றி என்னால் தெரிந்துகொள்ள முடியாது போகும் சமயம், பிறரிடம் சென்று விஷயத்தைத் தெரிந்துகொள்ள நான் வெட்கப்படுவதில்லை. உனக்குத் தெரியாததைப் பிறரிடம் கேட்டுத் தெரிந்துகொள். அறிவு வளர்ச்சிக்குத் துணையாயிருப்பது கேள்வி என்பதே.

* * *

கர்வம்படைத்த பக்தனைக் காட்டிலும், அடக்க ஒடுக்கத்துடன் தொழுபவனே கடவுளால் ஏற்கப் படுவதற் குரியவன்.

* * *

சிருஷ்டிக்கப்பட்ட பிராணிகளில் சிறந்தவன் மனிதன், மிகவும் தாழ்ந்தது நாய். உண்ட சோற்றிற்கு இரண்டகம் நினையா நாய் நன்றியிலா மனிதனைவிடச் சிறந்ததெனப் பெரியோர் அபிப்பிராயப்படுகின்றனர். ஒரு ரொட்டித்துண்டைப் போட்டவனை நாய் ஒருநாளும் மறக்கின்றதில்லை. அடித்தாலும் அது விச்வாஸமாய்த்தா னிருக்கும். தாழ்ந்தகுலத்தான் ஒருவனை வருஷக்கணக்கில் அன்புடன் ஆதரித்து வந்தாலும், ஒன்றுமிலாத சிறுவிஷயத்தில் கோபங் கொண்டு விரோதியாய் விடுவான்.

* * *

துஷ்டனைக் கொல்பவர், மனித இனத்தைக் கஷ்டத்தினின்று விடுவிக்கின்றனர். துஷ்டனும் கடவுளின் கோபத்திற் குள்ளாகாது காக்கப்படுகின்றான். ஆதாமின் பிள்ளைகளைச் சுற்றிக்கொண்டு பாம்பு வருத்துகின்றது, காரணம் முன் ஆதாம் அதற்குப் பரிவு காட்டியதே.




### ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினாற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச், சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.



### கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய் விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.



### முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்தநூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.



### திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும் விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பில் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0–12–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## பருந்தும் நிழலும்.

A. பாலகிருஷ்ணன் M. A. B. L. இயற்றியது.

டிக்வன்ஸி, எமர்ஸன், லாண்டார், ரஸ்கின் போன்ற பல ஆங்கில ஆசிரியர்களின் பிரபலமான கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கிய நூல். அவ்வக் கட்டுரைகளுக்குத் தோற்றுவாய் விளக்கம் முதலியனவும் அருமையாய் எழுதியிருக்கின்றார்.

விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

மானேஜர், கலா நிலயம்.

11. வேளாளர் தெரு, புரசை, சென்னை.

## நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

## குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

## பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது

விலை, காலிகோ கட்டடம் ரூபா 1 4 0

" சாதாரண கட்டடம் " 1 0 0

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் ... | ... ரூ | 5 | 0 |
| அயோத்தியாகாண்டம் | ... | 5 | 0 |
| ஆரணியகாண்டம் ... | ... | 4 | 0 |
| கிட்கிந்தாகாண்டம் | ... | 4 | 8 |
| சுந்தரகாண்டம் ... | ... | 5 | 0 |

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## கணித சோதிடம்.

கணித ரீதியாய்ப் பலன் கூறுபவர். ஒருவருஷத்திற்கு மாதவாரியாகவோ அல்லது தசாபுக்தியாகவோ பலன் எழுத ரூ. 2. ஒரு வருஷத்திற்கு ஒன்பது பலனுக எழுத ரூ 10. தினப்பலன் ரூ. 20. ஜாதகமில்லாதவர் பேரையும், கடிதம் எழுதும் நேரத்தையும் அறிவிக்கவும். எழு கேள்விக்கு ரூ. 1. பொருத்தம் பார்க்க ரூ 1. ஜாதகம் குறிக்க ரூ 2. மாணத்தைப்பற்றி வருஷ மாதம் தேதி நாழியுடன் அஷ்டவர்க்க பலன் எழுத ரூ 25. புத்திர சந்தான மில்லாதவருக்குத் தோஷ நிவர்த்தி கூற ரூ. 5. அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

'அப்பாஜி சோதிடரை ஓராண்டாய் அறிவேன். அவரது சோதிடப்புலமையும் பலன்கூறும் திறத்தையும் கண்டுள்ளேன். பலன் சரியே நடந்து வருகின்றது' என, திரு T. V. கலியாணசுந்தர முதலியார் கூறுகின்றார்.

அப்பாஜி ஜோஸ்யர்,

321, ஐரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

## கௌசிக சிரோ கல்பம்.

தைலங்கள் இனித் தேவை யில்லை. வியாபாரிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும், வக்கீல்களுக்கும், மாணுக்கர்களுக்கும் மற்றும் மூளைவேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது. இக்கல்பம்பாலிலாவது ஜலத்திலாவது கொதிக்கவைத்து உபயோகிக்கலாம். மண்டையிடி, ஒற்றைத் தலைவலி, கண்எரிச்சல் மூளைக்கொதிப்பு முதலியவற்றை உடனே போக்கிக் கண்களுக்கு வன்மையையும் பிரகாசத்தையும் கொடுக்கும்.

பாக்கெட் 1-க்கு அணு 8. தபாற்கூலி வேறு.

இதனை விற்க எங்கும் ஏஜண்டுகள் தேவை:—

மானேஜர்:—சேலம் ஸ்டோர்ஸ்,

சேலம்.—SALEM.




# வர்த்தமானம்

**மகாத்மாகாந்தியின் அறிக்கை:**—ராஜப்பிரதிநிதியின் அறிக்கையை ஒட்டித்தனது நிலைமை ஈதெனக் காந்தியடிகள் 'எங்இந்தியா' பத்திரிகையில் விளக்குகின்றார். அதன் சுருக்கம் வருமாறு:—

"தொழிற் கட்சியார் நல்ல எண்ணத்துடன் இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்திற்காக முயன்று வருவதுபோல் நானும் ஒத்துநடந்து அன்னவர் முயற்சியைச் சுலபப்படுத்தவேண்டுமென்று ஆங்கில நண்பர் பலர் எனக்குத் தந்தி கொடுத்துவருகின்றனர். ராஜப்பிரதிநிதியின் அறிக்கையைப் பாராட்டி நான் மற்றத்தலைவர்களுடன் வெளியிட்ட அறிக்கை எனது நிலையைப் புலப்படுத்தும். நான் எப்பொழுதும் ராஜி செய்துகொள்ளவே விரும்புபவன். அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மிகுந்த ஆவலுள்ளவன். எனது ஒத்துழையாமை இயக்கம், உண்மையான ஒத்துழைப்பின் அடையாளம் என்பதை அறிவிக்கின்றேன். ஆகவே சந்தர்ப்பந்தான் வேண்டும். ராஜப்பிரதிநிதியின் அறிக்கையால் ஒத்துழைக்கச் சந்தர்ப்பம் வந்துளதெனக்கொண்டு அதை ஏற்று மற்றவர்களுடன் அறிக்கையை வெளியிட்டேன். கல்கத்தா காங்கிரஸ் செய்த தீர்மானத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் நடத்திவைக்க நான் எண்ணியதுபோலவே, இப்பொழுது நானும் மற்றவர்களும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையை நடத்திவைக்க எண்ணியுள்ளேன். உண்மையில் நான் குடியேற்றநாட்டு அந்தஸ்த்தைப் பெறமுடியுமானால், அதற்காக நான் காத்திருக்க முடியும். இந்தியா சுயமதிப்புடனும் சுயேச்சையாகவும் இருப்பதற்கானவை செய்யப்படவேண்டும். அதற்குவழி துப்பாக்கிகளும் பீரங்கியுமல்ல. ஜனங்களின் நல்லெண்ணமே. அந்த நல்லெண்ணத்தைப் பெறப் பிரிட்டிஷார் தயாராக விருக்கின்றார்களா? தயாராக வில்லையெனில் எனக்குத் திருப்தியளிக்கக் கூடிய குடியேற்றநாட்டு அந்தஸ்து என்பது ஒன்றுமாகாது. குடியேற்றநாட்டு அந்தஸ்தென்பது, விரும்பினால் நான் ஏகாதிபத்தியத்திலிருக்கவும், இல்லையெனில் விலகவும் உரிமை கொடுக்கும் ஒன்று. இக்கருத்துகளை தொழில் கவர்ன்மெண்டார் உத்தேசித்திருக்கலாம் என்றே எண்ணுகின்றேன். இந்தியா தனது சொந்தசக்தியால் நான்கூறிய உரிமைபெற வன்மை பெற்றிருக்கவில்லை யென்பதை நான் அறிவேன். பிரிட்டிஷார் நல்லஎண்ணத்தினின்று அங்ஙிலை ஏற்படுமாயின், இதுவரையில் அவர்கள் இந்தியாவினிடம் புரிந்த பிழைகளுக்கு ஓரளவு பரிகாரமாகும்.

***

**ஆப்கன் அரசாங்க அறிக்கை:**—ஆப்கன் நாட்டுப் புதிய அமீர் நாதர்கான், தன் நாட்டின் முன்னேற்றத்திற்கானவாறு செய்யவிருக்கும் திருத்தங்களைப் பற்றிய அறிக்கை:—

பொதுவாய் அரசாங்க நடைமுறையில் இஸ்லாம் மதச்சட்டம் அநுசரிக்கப் பெறும்.

அரசாங்க நிர்வாக விஷயமாகத் தேசியப் பிரதிநிதிகளைக்கொண்ட சபையும், வரவுசெலவுக் கணக்குகளைக் கவனிக்க ஒரு போர்ட் சபையும் சீக்கிரத்தில் ஸ்தாபிதமாகும்.

லஞ்சம் வாங்குவதில்லை யென்றும், அரசாங்க அலுவல்களை ஒழுங்காகப் பார்ப்பதாயும் கொரானின் பேரில் சத்தியம் வாங்கியே உத்தியோகஸ்தர்கள் நியமனம் பெறுவர்.

சாராயம் குடிக்கவோ, செய்யவோ, விற்கவோ ஆப்கன் சட்டம் இடம் தாராது. சட்டமீறி நடப்பவர் ஷரியத்தில் விதித்துள்ள தண்டனைக்குள்ளாவார்கள்.

ஆப்கன் மதிப்பையும், சுதந்தரத்தையும் பாதுகாக்கவும், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவும் ராணுவம் வேண்டியதவசிய மாகையால் நவீன முறையில் ராணுவப் பயிற்சிதரும் ராணுவப்பாடசாலையொன்று திறவப்படும்.

அமீர் அமனுல்லாகான் காலத்தில் அன்னிய நாடுகளுடன் இருந்துவந்த சம்பந்தமே இனியும் இருந்து வரும்.

தந்தி தபால் வசதிகளும், சாலை ரயில்போக்கு வசதிகளும் சீக்கிரத்தில் ஏற்படும். விவசாய அபிவிர்த்திக் கென்றும், வியாபார அபிவிர்த்திக் கென்றும் வசதிகளும், பயிற்சியும் தரப்படும்.

கல்வி அபிவிர்த்திக்காகப் பாடசாலைகள் எங்கும் ஏற்படுத்த முயற்சிகள் நடந்துவருகின்றன.

தேசிய மஹாசபையில் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். ஜனங்கள் எல்லோருக்கும் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க உரிமை உண்டு.

இத்தகைய திருத்தங்கள் சீக்கிரத்தில் ஏற்படும். ஜனங்களின் நன்மையே அரசாங்கத்தின் முக்கிய நோக்கம்

***

**கார்ப்போரேஷன் தலைவர்:**—சென்றவாரம்சென்னை கார்ப்பொரேஷன் கூட்டத்தில் தலைவர்தேர்தல் நடந்தது. ஸ்ரீமான். A. ராமஸ்வாமி முதலியாரும், டாக்டர். C. நடேச முதலியாரும் அப்பதவிக்கு அபேக்ஷகராய் நின்றனர் தேர்தலில் அதிகமான ஓட்டு ஸ்ரீமான் ராமஸாமிமுதலியார் பெற அவர் இரண்டாம் முறையாகத் தலைவர் பதவியைப் பெற்றார்.

***

**கிராமச் சீர்திருத்தம்:**—காலஞ்சென்ற C. R. தாஸ் கிராமச் சீர்திருத்தத்திற்காக வொருதிட்டம் போட்டிருந்தார். அத்திட்டம் அவர் இறந்தபிறகு வங்காள கவர்ன்மெண்டாரின் அங்கீகாரம் பெற்றது. இப்பொழுது அரசாங்க சுகாதார இலாக்காதார் இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளார். சுகாதாரப் பயிற்சிபெற்ற 500பேர் வங்காளத்திலுள்ள கிராமங்களில் நல்லவேலை செய்து வருகின்றனர் என்று வங்காளச் செய்தி கூறுகின்றது.

***

**சிவகாசி கலால் கமிட்டி:**—சிவகாசி டிவிஷன் கலால் இலாக்கா ஆலோசனைக் கமிட்டியின் கூட்டம் சென்றவாரம், சிவகாசி சப்கலக்டரின் தலைமையில் கூடிற்று. அப்பொழுது ஸ்ரீமான் A. சீனுவாஸா சாரியார் சிவகாசி தாலுக்கா போர்ட் எல்லைக்குள் இருக்கும் கள்ளுக்கடைளனைத்தையும் மூடிவிடவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். கலால் இலாக்கா சப்இன்ஸ்பெக்டர் இதை எதிர்த்தார்; எனினும் அதிகமானவர் ஆதரிக்கத் தீர்மானம் நிறைவேறியது என்று தெரிகின்றது.

***

**இந்தியருக்கு ராணுவப்பயிற்சி:**—சென்ற வாரம் கோகலே மண்டபத்தில் கூட்டத்தில் கூடிய தலைமை வகித்த ஸர். சிவசாமி ஐயர் அவர்கள் பேசியதாவது:—

இந்திய வாலிபர் ராணுவப்பயிற்சி பெறவேண்டுவது அவசியம் ராணுவப்பயிற்சி விஷயத்தில் இந்தியர் என்றும்ஐரோப்பியர் என்றும் வேற்றுமை பாராட்டாது அரசாங்கத்தார் இந்தியரை ராணுவத்தில் பயிலுமாறு இன்னும் செய்யவில்லை. ஜனங்களின் முயற்சியாலும், சட்டசபையின் முயற்சியின் பயனுகவும் சில நிபந்தனையுடன், படித்தவர்களுக்கு ராணுவப்பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுளது. மேலும் 16 வயதிற்குட்பட்டவர்களும் 31வயதிற்குட்பட்வர்களும் பயிற்சி பெறவும் இங்கு வசதியுண்டு. சென்னையில் ஏற்பட்டுள்ள அர்பன் க்லாட்படையில் 346 இந்தியருக்கு இடமுண்டு. இப்படையில் இதுவரை 50 பேர்கூடச் சேரவில்லை. சென்னைத்தலைவர்கள் இப்படையில் வாலிபர்களைச் சேர்க்கவேண்டும். வாலிபர்களும் சீக்கிரம் இப்படையில் சேரவேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்"

ஸ்ரீமான். ஏ, ரங்கநாத முதலியாரும், ஸர். ஏ. பி. பாத்ரோவும் பேசினர், பின்னர்க் கூட்டம் கலைந்தது.

KALANILAYAM.
REG. NO. M, 2324.


## A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

*MANAGER:—*

***"KALANILAYAM"***

*11, VELLALA STREET.*

**Purasawalkam MADRAS.**



**1928**-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் **கலா நிலயம்** செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

*சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும்.* T, P. *மீனாட்சிசுந்தரம்* M. A .B. L.—51 *கட்டுரைகள்.*

2. கம்ப இராமாயணம்

*பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை*—T. N. *சேஷாசலம்,* B. A. B. L. 51 *கட்டுரைகள்.*

3. அகப்பொருள் வரலாறு

*காட்சிமுதல், ஓதற்பிரவு வரை*—K. *இராமரத்நம் ஐயர்* B. A. 18 *கட்டுரைகள்.*

4. காந்திமதி

*காவிய இயல்நலம் பெற்ற சற்றமிழ் நாவல்.* T. N. *சேஷாசலம்* B. A. B. L. 51 *இதழ்களில் வந்துளது.*

5. தமிழ்ப்பாடம்

*நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.*

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

*பிரிடரிக் நீட்ஷேன் எபிகுரூஸ் ஜீனோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்*—T. R. *இராஜகோபால்,*

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. *சொக்கம்மாள்* B. A; L. T. *எழுதியது* 6 *கட்டுரைகள்.*

8. தேவாரமும் ஐந்திணையும்

*தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்*—E. N. *தணிகாசல முதலியார்* B. A. B. L. 8 *கட்டுரைகள்*

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

*கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாயினோர்.*

10. இலக்கியக் கதைகள்

*புரந்தரனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.*—R. *முத்தையர்*

11. வானசாஸ்திரம்

*இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.*—20 *கட்டுரைகள்.*

மலர்வனம் பழமுதிர்சோலை

*சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.*

*நாலடி நானூற்றின் திறம், சிவகாமி, சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.*

| | | | |
|---|---|---|---|
| விலை விபரம்—தபால் செலவு உள்பட:— | பையின்டு செய்யாதது | உள்நாடு ரூ 8—0—0 | வெளிநாடு ரூ 9—8—0 |
| | ஆப்லெதர் கில்டுபயின்டு | உள்நாடு ரூ 10—0—0 | வெளிநாடு ரூ 11—8—0 |
| | காலிகோ பயின்டு | உள்நாடு ரூ 9—8—0 | வெளிநாடு ரூ 11—0—0 |

**கலா நிலயம் ஆபீஸ்,** 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)